Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 344
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் தை 11 ஜுலைசம் 26 ஞாயிற்றுக்கிழமை (24-1-71)




# மன்னாரில் 40 ஏக்கரில் முந்திரி பயிராகும்

## தோட்டத் தொழில் அமைச்சு ஏற்பாடு

கோட்டை, சனி

மன்னார்பகுதியில்சுமார் 40 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் முந்திரி பயிர்செய்யப்படவிருக்கிறது.

முந்திரி பயிர்ச்செய்கைக்கு பொருத்த மெனக் கருதப்படும் மன்னார்ப் பகுதியில் இப்பயிரை பரந்த அளவில் பயிரிடுவதற்கு தோட்டத்தொழில் அமைச்சு முடிவு செய்திருக்கின்றது.

மன்னார் பகுதியில் தெரிவு செய்யப்பட்டுள்ள 40 ஏக்கர் நிலத்திலும் முந்திரிகை இவ்வருடம் ஏப்ரல் மாதத்தில் பயிர் செய்யப்படவிருக்கின்றது.

## 16-வது வருடமும் தலைவராகத் தெரிவு

புலோலி, வெள்ளி

உடுப்பிட்டிக் கிராமசபையின் தலைவர் தெரிவு இன்று கிராமசபை மண்டபத்தில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. என். நல்லநாதன் தலைமையில் நடைபெற்றபோது வழக்கறிஞர் ஆர் ஆர். தர்மரத்தினம் மீண்டும் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

திரு ஆர். ஆர். தர்மரத்தினத்திற்கு 15 வாக்குகளும் இவருடன் போட்டியிட்ட 18ம் வட்டார அங்கத்தவர் திரு. ரி. மயில்வாகனத்திற்கு 6 வாக்குகளும் கிடைத்தன. 19ம் வட்டார அங்கத்தவர் திரு. ரி. திருநாவுக்கரசு ஒருவருக்கும் வாக்களிக்கவில்லை.

வடஇலங்கை சமசமாஜ கட்சி பஸ் தொழிலாளர் யூனியனின் தலைவருமான திரு. தர்மரத்தினம் இச்சபையின் தலைவராக 16 வருடங்கள் தொடர்ந்து பதவி வகித்துள்ளார்.

தலைவர் பதவியை ஏற்றுக் கொண்டபோது திரு. தர்மரத்தினம் ஆதரவாளர் மத்தியில் பேசுகையில் 14 வருடங்களுக்கு முன்னர் உடுப்பிட்டிக்கிராமசபை தலைவராக நான் பதவியேற்றபோது இச்சபையில் 2,500 ரூபாவரையில் நட்டத்தில் இருந்தது. இப்போது இச்சபையில் 35,000 ரூபா கைவசம் உண்டு என்றார். நேர்மையும், கண்ணியமும் எப்பொழுதும் நிலைத்து நிற்கும் என்பதை என வெற்றி எடுத்துக் காட்டுகிறது என்றும் சொன்னார்.

## உடன்பாடு இல்லையேல்

# இந்திரா காங்கிரஸ் தனித்து நின்று போட்டியிடும்

சென்னை, ஜன. 23

தொகுதி ஒதுக்குவது சம்பந்தமாக தி மு. கழகத்தின் தலைமையிலான ஏழு கட்சிகூட்டணியுடன் உடன்பாடு ஏற்படாது போனால் ஜெகஜீவன்ராம் தலைமையிலான காங்கிரஸ் கட்சி தமிழ் நாட்டில் வரும் பொதுத் தேர்தலில் தனித்து நின்றே போட்டியிடும்.

இவ்வாறு ஜெகஜீவன்ராம் தலைமையிலான காங்கிரஸ் கட்சியின் தமிழ்நாடு செயற்குழு முடிவுசெய்திருக்கிறது. தொகுதி ஒதுக்குவது சம்பந்தமாக திராவிட முன்னேற்றக் கழகத்துடன் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் முட்டுக்கட்டை ஏற்பட்டதைத் தொடர்ந்து செயற்குழு இந்த முடிவை எடுத்திருக்கிறது.

தொகுதி ஒதுக்குவது சம்பந்தமான திராவிட முன்னேற்றக்கழகத்தின் போக்கு தங்கள் கட்சியின் கௌரவத்துக்கு ஊறு விளைவிப்பதாக இருக்கின்ற தென செயற்குழு கருத்து வெளியிட்டிருக்கிறது. கூட்டு முன்னணியைத் தாங்கள் குலைக்க விரும்பவில்லை யென்றும் தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாடு செயற்குழுவின் முடிவை மத்தியக் குழுவிற்கு திரு சி சுப்பிரமணியம் தெரிவிப்பார் என்று தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் திரு வி. ஆர். சுவாமிநாதன் தெரிவித்தார். தனித்துப் போட்டியிடுவதாயின் முன்னணி பலவீனமடைந்து விடும் என்று திரு. சுப்பிரமணியம் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

(8-ம் பக்கம் பார்க்க)

# சுந்தரலிங்கத்தின் றிற் மனு தள்ளுபடி

கொழும்பு, வெள்ளி

அரசியல் நிர்ணய சபை செல்லுபடியாகாதெனத் தெரிவித்து முன்னாள் வவனியா எம். பி. திரு. வி. சுந்தரலிங்கம் தாக்கல் செய்த மனு இன்று தள்ளுபடி செய்யப்பட்டது.

நீதியரசர் திரு. எச். என். ஜி. பெர்னாண்டோ இம்மனுவைத் தள்ளுபடிசெய்து பிறிதொரு தினத்தில் தள்ளுபடி செய்ததற்கான காரணத்தைத் தெரிவிப்பதாக கூறினார்.

அரசியல் நிர்ணயசபை சட்டத்துக்குட்பட்டபடி கூட்டப்படவில்லையென்றும் அரசியல நிர்ணயசபையைக் கூட்டுவதற்குபிரதம மந்திரிக்கு எவ்வித அதிகாரமுமில்லையென்றும் புகார் செய்து பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்கு எதிராக 'கோவரண்டோ' றிட் ஒன்றைப் பிறப்பிக்குமாறு கோரி இந்தமனுவை உயர் நீதிமன்றத்தில் முன்னாள் வவனியா எம். பி திரு வி சுந்தரலிங்கம் தாக்கல் செய்திருந்தார்.

பிரதம நீதியரசர் திரு எச் என் ஜி பெர்னாண்டோ, நீதியரசர் எஸ், ஆர் விஜயதிலக்கா ஆகியோர் முன்னிலையில் இவ்வழக்கு இன்று விசாரிக்கப்பட்டது.

திரு சுந்தரலிங்கம் தமது சார்பில் தாமேவாதாடினார்.

## தமிழரசின் திருத்தங்கள்

கொழும்பு, வெள்ளி

புதிய அரசியல் திட்டத்திற்கான அடிப்படைத் தீர்மானத்துக்கு பின்வரும் திருத்தங்களைச் சமர்ப்பிப்பதென்று தமிழரசுக்கட்சி தீர்மானித்துள்ளது.

சமஷ்டி அமைப்பு முறை

தமிழும் சிங்களமும் உத்தியோகமொழி.

வடக்கு கிழக்கில் தமிழ் நீதிமன்ற மொழி.

## புதிய அரசியல் திட்டம்:

# அரசியல், பொது ஸ்தாபனங்கள் திருத்தங்கள் பற்றி ஆராயும்

கோட்டை, சனி

புதிய அரசியல் திட்ட அடிப்படைத் தீர்மானத்துக்குக் கொண்டுவரப்பட வேண்டிய திருத்தங்கள் பற்றி ஆராய்வதற்காக பல பொது ஸ்தாபனங்களும், அரசியல்கட்சிகளும் விரைவில் கூடவிருக்கின்றன.

அகில இலங்கை பௌத்த காங்கிரஸ், தமிழ்மாநாட்டுத் தொடர்குழு, தமிழரசுக்கட்சி ஆகியன இம்மாத முடிவுக்குள் கூடி தமது திருத்தங்களைத் தயாரிக்கும்

தமிழரசுக் கட்சி ஏற்கனவே திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையில் கூடி, புதிய அரசியல் திட்டத்துக்கெனக் கொண்டு வரப்படவேண்டிய 3 திருத்தங்கள் பற்றி முடிவுசெய்தது. சமஷ்டி அமைப்பு முறை. தமிழும் சிங்களமும் உத்தியோகமொழி. வடக்கு கிழக்கில் தமிழே நீதிமன்ற மொழி ஆகியன புதிய அரசியல் திட்டத்தில் சேர்க்கப்படவேண்டுமென்பது தமிழரசுக்கட்சி சமர்ப்பிக்கவிருக்கும் திருத்தங்களாகும். மேலும் 7 திருத்தங்கள் பற்றி தமிழரசுக்கட்சி மீண்டும் கூடி ஆராயவிருப்பதாகவும் தெரிகிறது.

அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் இம்மாதம் 27ம் திகதி கூடி புதிய அரசியல் திட்டம்மீது கொண்டுவரப்படவேண்டிய திருத்தங்களை பற்றி ஆராயவிருக்கிறது. இதன் தலைவர் டாக்டர் குணபால மலலசேகரா தலைமையில் நடைபெறவிருக்கும் கூட்டத்தில் அண்மையில் அரசியலமைப்பு விவகார அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி சில்வாவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள புதிய அரசியலமைப்பு திட்டத்துக்கான அடிப்படைத் தீர்மானங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளபொதுவான பல பிரச்னைகள் பற்றி ஆராயப்படும். குறிப்பாக பௌத்தத்துக்கு அளிக்கப்பட்டுள்ள இடம்பற்றி இங்கு பிரஸ்தாபிக்கப்படும்.

பல பௌத்த ஸ்தாபனங்கள் அரசியல் திட்டத்தில் பௌத்த மதத்துக்குக்கொடுக்கப்பட்டுள்ள இடம் திருத்தப்படவேண்டும் என்று அபிப்பிராயம் தெரிவித்துள்

(8-ம் பக்கம் பார்க்க)

## கிரிக்கட் ரெஸ்ட்

# இங்: 258-4

மெல்போன், ஜன. 23

அவுஸ்திரேலியாவிற்கும்-இங்கிலாந்துக்கும் மிடையில் மெல்போனில் நடைபெறும் 5வது கிறிகற் டெஸ்டில் இங்கிலாந்து தனது முதல் இன்னிங்ஸில் இன்று 4 விக்கட்டுகளை இழந்து 258 ஓட்டங்கள் எடுத்திருந்தது. லக்கர்ட் (செஞ்சரி) அடித்து 109 ஓட்டங்களை எடுத்தார்.

அவுஸ்திரேலியா ஏற்கனவே தனது முதல் இன்னிங்ஸில் 9 விக்கட்டுகளை இழந்து 493 ரன்கள் எடுத்திருக்கின்றது.

# முன்னணியில் வடபகுதி

மாவிட்டபுரம், சனி

சங்கு, கடலட்டை முதலிய வியாபாரத்தால் வடபகுதி மாதந்தோறும் வெளிநாட்டிலிருந்து லட்சக்கணக்கான ரூபாயைப் பெறுகின்றது.

வடமாகாண கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினர் கிழக்கு பாகிஸ்தானிலுள்ள கொன்சல் கூட்டுத்தாபனத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி இச்சங்கு அனுப்பப்பட்டது.

வடமாகாணத்தில் கடற்றொழிலாளர்களின் பெருமுயற்சியால் இலங்கையிலுள்ள சகல பகுதிகளிலும் பார்க்க வடமாகாணம் சங்கு, கடலட்டை போன்றவற்றை வெளிநாடுகளுக்கு அனுப்புவதில் முன்னணி வகிக்கிறது.

இம்மாதத்தில் 2 லட்சம் ரூபா பெறுமதியான சங்கு கிழக்குபாகிஸ்தான் கொன்சல் கூட்டுத்தாபனத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது. பெப்ரவரி மாதத்தில் கொன்சல் கூட்டுத்தாபனத்துக்கு 50 ஆயிரம் ரூபா பெறுமதியான சங்கும், கொன்சல் கூட்டுறவுப் பண்டசாலைக்கு 15 ஆயிரம் ரூபா பெறுமதியான சங்கும் ஏற்றுமதி செய்யப்படவிருக்கிறது.

கடந்த டிசம்பர் மாதத்தில் 1 லட்சத்து 43 ஆயிரம் ரூபா பெறுமதியான கடலட்டை சிங்கப்பூருக்கு அனுப்பப்பட்டுள்ளது. கற்போது 1 லட்சத்து 14 ஆயிரம் ரூபா பெறுமதியான கடலட்டை சிங்கப்பூருக்கு ஏற்றுமதியாகிக்கொண்டிருக்கிறது வருகிற மாதம் 72 ஆயிரம் ரூபா பெறுமதியான கடலட்டை அனுப்பப்படவிருக்கிறது.

கடலட்டைகள், சங்கு அனுப்பப்படுவதால் வெளிநாட்டுச்செலாவணி சலுகைப்பணம் உட்படபல லட்சம் ரூபா இலங்கைக்குக் கிடைப்பதாகவும், ஏற்றுமதிக்கப்பல்களால் ஏற்படும் தாமதத்தாலும், நவீன வசதிகள் செய்யப்படாததாலும் ஏற்றுமதி பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இவ்வசதிகள் செய்யப்பட்டால் மேலும் அபிவிருத்தியடையச்செய்யலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது

## காணிக் கச்சேரி

கிளிநொச்சி, சனி

முத்தையன்கட்டு விவசாயத் திட்டத்தில் மேலும் 400 ஏக்கர் மேட்டு நிலக் காணித்துண்டுகள் உப உணவுப் பயிர்ச் செய்கைக்காக வழங்கப்படவுள்ளது.

காணித்துண்டுகளைக்கோரி உப பகுதியைச் சேர்ந்த சுமார் 500-க்கு மேற்பட்ட விவசாயிகள் விண்ணப்பித்துள்ளனர். இம்மாத இறுதியில் காணிக் கச்சேரி நடைபெறவுள்ளதாக அறியப்படுகிறது.

விளையாட்டமைச்சின்

## உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

பருத்தித்துறை, சனி

வடமராட்சி வடக்கு, கிழக்கு காரியாதிகாரி பிரிவுகளுக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான சுற்றுப்போட்டி இவ்வாண்டு தொடக்கம் விளையாட்டமைச்சினால் நடாத்தப்படவுள்ளது.

இம்மாதம் 23-ம் திகதி ஆரம்பமாகவிருக்கும் இச்சுற்றுப்போட்டியில் பருத்தித்துறையூனைற்றெட், பருத்தித்துறைக்கழகம், வல்வெட்டித்துறை புளூஸ் இருபிரிவுகள், வல்லை ஒற்றுமைக் கழகம், உடுப்பிட்டி வடக்கு யூனியன், உவாசக்திக்கழகம் ஆகியன பங்குபற்றுகின்றன.

மூன்று பிரிவுகளில் நடக்கவிருக்கும் இப்போட்டியில், வெற்றிவீரருக்கு முத்தையா ஞாபகார்த்த வெற்றிக்கேடயமும் இரண்டாமிடம்பெறுபவர்களுக்கு நெடியகாடு வெற்றிக்கேடயமும் அளிக்கப்படவிருக்கின்றன.

இன்று

## புதுமைமாதா நவநாள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் குருநகர் பரி புதுமை மாதா தேவாலய நவநாள் இன்று ஆரம்பமாகி அடுத்த மாதம் 1-ம் திகதியுடன் முடிவடையும்.

அடுத்த மாதம் 2-ம் திகதி காலையில் திருநாள் பூசையும், மாலையில் சுற்றுப் பிரகாரமும் நடைபெறும்.

(தே நி)

25ந் திகதி

## தொ.நு.மா. மன்றப் பொதுக்கூட்டம்

உடுப்பிட்டி, சனி

அகில இலங்கைத்தொழில் நுட்பக் கல்லூரி மாணவர் மன்றப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 25ம் திகதி கொழும்பில் நடைபெறுமென அறிவிக்கப் பட்டுள்ளது.

கொழும்பு தொழில் நுட்பக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் இக் கூட்டத்தில் கட்டுப்பத்தை தொழில் நுட்பக்கல்லூரி மாணவர்களின் பிரச்னைபற்றி ஆராயப்படுவதோடு புதிய நிர்வாகிகள் தெரிவும் நடைபெறும்.

## கலையரசுக்கு பாராட்டு

கொழும்பு, சனி

கலையரசு சொர்ணலிங்கம், கேட்முதலியார் ஏ. சி. ஜி. ஏ. அமரசேகரா ஆகியோர் கலைத்துறையில் செய்த சேவையைப் பாராட்டுமுகமாக இம்மாதம் 26-ம் திகதி ஹோட்டல் தப்ரபேனில் பாராட்டு விழாவொன்று நடைபெறவிருக்கிறது. கொழும்பு கலைவட்டம் இவ்விழாவை ஏற்பாடுசெய்துள்ளது.

## புதுவருட நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

புனிதவளன் விளையாட்டுக் கழகத்தின் 23-வது வருடாந்த பொதுக் கூட்டம் அண்மையில் சென். ஜேம்ஸ் பெண்கள்பாடசாலையில் கழகத் தலைவர் திரு. அ. யேசுதாசன் தலைமையில் நடைபெற்றது.

புதிய வருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: யே. அமலசீலன், உபதலைவர்கள்: பிலிப் மத்தியூஸ், யேசுதாசன், செயலாளர்: அ' யோசவ், உப செயலாளர்: அ. யேசுதாசன், பொருளாளர்: ம. சூசைநாதன், விளையாட்டு செயலாளர்: ம. பி.கோமேந்திரன், உப வி. செயலாளர்: செ. இராஜபாலன், சிறுவர் கழக பாதுகாவலர்: ம வின்சன்ற், கழக போஷகர்கள்: வண. பிதா. சவரிமுத்து, திரு. ஜூரிதர் இராஜரெத்தினம், 'கெயர்' ஸ்தாபன இலங்கை பிரதிநிதி எம். டி. யேசுதாசன்.

(தே. நி)

## சமூக சேவை வாரம்

கோட்டை, சனி

இலங்கையில் முதன்முதலாக 'சமூகசேவை வாரம்' கொண்டாடப்பட விருக்கிறது. பெப்ரவரி 24-ம் திகதி தொடக்கம், மார்ச் 3-ம் திகதி வரை 'சமூக சேவை வாரம்'மாகக் கொண்டாடுவதென சமூகசேவைகள் அமைச்சர் திரு. ரி. பி. தென்னக்கூன் முடிவு செய்துள்ளார்.

சமூகசேவை வாரத்தில் சமூக சேவை நிலையங்களை நிர்வகிப்பதற்கான நிரந்தர நிதித்திட்டம் ஒன்றை அமைச்சர் ஆரம்பித்து வைப்பார். அத்துடன் கலை, கலாச்சார நிகழ்ச்சிகள், பொதுக் கூட்டங்கள் ஆகியவற்றை நடத்த சமூக சேவைகள் அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

## இடமாற்றம்

ஊரதீவு, சனி

புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்கப் பாடசாலை ஆசிரியை திருமதி வி. மகாலிங்கம் புங்குடுதீவுக்கு இடமாற்றலாகி வந்துள்ளார்.

0 0 0

ஊர்காவற்றுறை, சனி

வேலணை - செட்டிபுலம் தமிழ்ப் பாடசாலையின் தலைமை ஆசிரியரான திரு. எஸ். அமிர்தலிங்கம் மண்டைதீவு கார்த்திகேய வித்தியாசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## 110-வது வயதில் காலமானார்

நாவற்குழி, சனி

நாவற்குழியைச் சேர்ந்த ஆறுமுகம் கோவிந்தர் என்பவர் தமது 110-வது வயதில் நேற்று முன்தினம் காலமானார். இவர் கடைசிவரை திடகாத்திரமாகவும் ஆரோக்கியமாகவும் இருந்தார். வாரத்திற்கொருமுறை நாவற்குழியிலிருந்து நல்லூர்க் கோவிலுக்கு கால் நடையாகவே சென்று திரும்பும் வழக்கமுடையவர் இவர்.

## அன்பளிப்பு

ஊர்காவற்றுறை, சனி

யாழ்ப்பாணம்- வாஷையூர் மக்கள் முன்னேற்றச் சங்கத்தின் ஆதரவில் நடைபெறும் இராப்பாடசாலையில் கல்வி பயிலும் ஏழை மாணவர்களுக்கு 'மில்க்வைற்' சோப் ஸ்தாபனத்தார் இலவசமாகப் பாடப் புத்தகங்களை வழங்கியுள்ளனர்.


## வரிவிளம்பரம்

### தேவை

றேடியோ திருத்துவதில் 10 வருட அனுபவமுள்ளவர்கள் தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். ரமணி கோப்பரேஷன்(Ramani Corporation) 54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 2672

### விற்பனைக்கு

பருத்தித்துறை - தும்பளை வீதியில் நகரசபை எல்லைக்குள் 2 பரப்புக் காணியும் மாடி வீடும் மின்சார-தண்ணீர் வசதிகளுடன் ரூபா 20,000/- அ. வி. ஜெயசீலன், கச்சேரி, புத்தளம். 2668

G. E. C. மெயின் றேடியோ பிலிப்ஸ் பற்றறி றேடியோ H. M. V. கிறமபோன் 25 றெக்கோட்ஸ் சவுண்ட்பொக்ஸ் (Extra) எலக்றிக் ஸ்திரிக்கை பெட்டி, எலக்றிக் மேசை லாம்பு, ரியூப் லைற். விக்ரேஸ், 23, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 2671

உங்களுக்கு காது கேட்கவில்லையா? காது கேட்க உதவும் கருவி (Hearing-aids) எம்மிடம் இப்பொழுது விற்பனையாகின்றது சிடில்ஸ் (யாழ்ப்பாணம்) லிமிட்டெட் 122, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். 2680

### பயிற்சி

தூய பிரயோக கணிதங்களில் (O/L) மட்டில் பயிற்சிகள் அளிக்கப்படும். விண்ணப்பிக்கவும் E. பரஞ்சோதி, 301 காங்கேசன் துறை வீதி, வண்ணார் பண்ணை அல்லது தலையாளி, கொக்குவில். 2679



ராணி சினிமா (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சிவாஜிகணேஷன் -சரோஜாதேவி
நடித்த
அன்பளிப்பு

வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி கணேசன் - சௌகார் ஜானகி
நடித்த
சக்கரம்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள் போயாநாட்கள் 4 காட்சிகள்
கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (கொழும்பு)



சிவாஜி - காஞ்சனா
எம். என். நம்பியார்
நாகேஷ் முத்துராமன்
இன்னும் பலர் நடித்த
ஈஸ்ட்மன் வர்ணச் சித்திரம்
சிவந்த மண்

மைலன் (கொழும்பு)
தினசரி 2-00, 6-00 9-00
எஸ். எஸ். ஆர். - சரோஜாதேவி
நடித்த
மணப்பந்தல்

வெலிங்டன் சினிமா
காவிப்பாகி
தினசரி 3-30, 6-30, 9-30
எம்.ஜி.ஆர். - சரோஜாதேவி
நடித்த
பெரிய இடத்துப் பெண்

மனோகரா
(யாழ்ப்பாணம்)
தினசரி 6-30, 10-00 மணி
ராஜ்குமார் - ரஜிகா
நடித்த
ஜாக்பாட்டில் ஸி. ஐ. டி. 999

REGAL Jaffna
Daily 3 shows
Poya days 4 shows
Lee Marvin
Angie Dickinson
in
POINT BLANK
(Adults only)
(Cinemascope&colour)

RAJAH
(Jaffna)
Daily at 4-45,7,9-45p.m.
Jeffrey Hunter
Arthur Kennedy
in
MURIETA
(Eastman color)

ஸ்ரீ காலிங்கன் இணுவில்
தினசரி 6-30, 9-30 போயா பிரிபோயா 2-30
காந்தராவ் * ராஜஸ்ரீ * ஜோதிலட்சுமி
நடித்த
மன்னனைக் காத்த மாவீரன்

# காமன்வெல்த் பிரகடனத்துக்கு ஒருமனதான அங்கீகாரம்

## ஸ்தாபனம் பிளவுபடுவது தவிர்க்கப்பட்டது

சிங்கப்பூர், ஜன 23

காமன்வெல்த் நாடுகளுக்கான நெறிகள் பற்றிய பிரகடனத்தை காமன்வெல்த் பிரதமர்கள் மாநாடு ஏகமனதாக ஏற்றுக் கொண்டது.

இந்து மாக்கடல் அமைதிப் பிரதேசமாக இருக்க வேண்டுமென்பதையும் உறுப்பு நாடுகள் ஏற்றுக்கொண்டுள்ளன. சிங்கப்பூரில் ஒன்பது நாட்களாக நடைபெற்ற சாம்ராஜ்ய பிரதமர்கள் மகாநாடு நேற்று முடிவடைந்தது. இம் மகாநாட்டில் இன ஒதுக்கல் கொள்கை, தென் ஆபிரிக்காவிற்கு பிரிட்டன் ஆயுதம் விற்கும் பிரச்னை இந்து மாக்கடலின் பாதுகாப்பு. இந்தோசீனப்பிரச்னை உலகப் பொருளாதார நிலைமைகள், பிரிட்டன் ஐரோப்பிய பொதுச்சந்தையில் சேருதல், சாம்ராஜ்ய நாடுகளின் அபிவிருத்தி ஆகிய விடயங்கள் பற்றி விவாதிக்கப் பட்டது.

தென் ஆபிரிக்காவிற்கு பிரிட்டன் ஆயுதம் விநியோகிப்பது, இந்துமா கடலில் இராணுவத்தளம் அமைப்பது பற்றிய விடயங்கள் மகாநாட்டில் கருத்து வேற்றுமைகளை ஏற்படுத்தின.

ஆனாலும் மகாநாட்டின் முடிவில் வெளியிடப்பட்ட பிரகடனத்தை எல்லா உறுப்பு நாடுகளும் ஏற்றுக் கொண்டுள்ளன. இந்தப் பிரகடனத்தில், ஐரோப்பிய பொதுச் சந்தையில் பிரிட்டன் சேர்ந்தால், அதனால் ஏற்படும் விளைவுகளிலிருந்து சாம்ராஜ்ய நாடுகளை பிரிட்டன் பாதுகாக்குமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. உலகப் பொருளாதார நிலைமைபற்றியும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்து மாக்கடல் அமைதிப்பிரதேசமாகவும், நடு நிலைமைப் பிரதேசமாகவும் இருப்பதற்கு எல்லா உறுப்பு நாடுகளும் ஒப்புக்கொண்டுள்ளன.

இம் மகாநாட்டில் பிரிட்டனின் போக்கை இதுவரையும் ஒளிவு மறைவின்றி எதிர்த்து வந்த சாம்பியா ஜனாதிபதி கவுண்டா வர இப்போது அதனை வேற்றிருப்பதாகச் சொல்லப்படுகிறது. பிரகடனம் இவ்விதம் தெரிவித்தாலும் தென் ஆபிரிக்காவிற்கு பிரிட்டன் ஆயுதம்விற்பதை கட்டுப்படுத்தாது என பிரிட்டிஷ் பிரதமர் திரு ஹீத் தெரிவித்தார்.

காமன்வெல்த் நாடுகளுக்கான நெறிகள்பற்றிய பிரகடனத்தை சாம்பியா சமர்ப்பித்திருந்தது இதற்கு பிரிட்டன், ஆஸ்திரேலியா போன்ற நாடுகள் திருத்தங்களைக் கொண்டுவந்தன திருத்தங்கள் ஏற்றுக் கொள்ளப் பட்டதையடுத்து பிரகடனம் ஒருமனதாக அங்கீகரிக்கப்பட்டது.

## வன்னிய சிங்கம் சிலை

கிளிநொச்சி, சனி

அமரர் வன்னியசிங்கத்துக்குக் கிளிநொச்சிப் பட்டினத்தில் சிலை எழுப்பப்படவுள்ளது. தமிழரசுக் கட்சியின் செயற்குழு மேற்கண்ட விடயமாக கிளிநொச்சியிலுள்ள கட்சிப்பிரமுகர்களுடன் தொடர்புகொண்டு வேண்டிய ஒழுங்குகளைச் செய்து வருகிறது. குறிப்பிட்ட சிலை பட்டினசபை நூல் நிலயத்திற்குமுன் நிறுவப்படலாமெனத் தெரியவருகிறது.

## 3500 இந்திய வர்த்தகர்

கோட்டை, சனி

இந்திய வம்சாவழியினர் எனக் கருதப்படும் சுமார் 3500 வர்த்தகர்களுக்கு இலங்கையைவிட்டு வெளியேறும்படி கோரும் அறிவித்தல்களை குடியேற்ற வெளியேற்ற இலாகா அனுப்பி வைத்துள்ளது.

இலங்கையில் இரத்தினக்கல் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள 200 பேர் இம்மாத முடிவில் இலங்கையைவிட்டு வெளியேறுகின்றனர்.

இவர்களுக்கு தற்காலிக வாச பர்மிட் மேலும் நீடிக்கப்பட மாட்டாதென அரசாங்கம் நோட்டீஸ் வழங்கியுள்ளது.

# "சமூகந்தான் என்னை இப்படி ஆக்கியது"

## ஹிப்பி தலைவர் மேன்சன் சொல்கிறார்

லொஸ்எஞ்சல்ஸ், ஜன. 23

என்மீது நீங்கள் கருணையோ, அனுதாபமோ, இரக்கமோ காட்டவில்லை உங்கள் நகரங்களில் என் சிந்தனை தீமூட்டிவிடுவதாக மனக் கண்ணில் நான் உணர்கின்றேன்.

இவ்வாறு சினிமா நடிகை ஷரன் டேட்டின் கொலை வழக்கில் எதிரியான ஹிப்பிகளின் தலைவன் சார்ல்ஸ் மேன்சன் அமெரிக்க மக்களுக்கு "திருவாளர்களுக்கும் திருமதிகளுக்கும் என்று" தலைப்பிட்டு விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருக்கிறார்.

ஏழுகொலைகளைப் புரிந்த மேன்சன்மீதும் அவரது சகாக்கள் மீதும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இந்த அறிக்கையை மேன்சனின் சிஷ்யர்களான மூன்று அழகிகள் வெளியிட்டார்கள்.

தன்னை "வெறிநாய்பிசாசு கொலைகாரன், தொழுநோய்க்காரன்" என்றெல்லாம் திட்டுவதின் மூலம் சமூகம் தனது தீய எண்ணங்களை தன் மீது சுமத்துகின்றது என்று மேன்சன் கூறியிருக்கிறார்.

"நான் யூதர்களின் அரசனும் அல்ல, ஹிப்பிகளின் தலைவனுமல்ல, எனது இந்த நிலை உங்களால், உருவாக்கப்பட்டதுதான்" என்று அவர் தெரிவிக்கிறார்.

மேன்சன் கடந்தஏழுமாதங்களாக விசாரிக்கப்பட்டு வருகிறார். தாம் ஓர் அரைப் படிப்புக்காரன் என்றும், ஜெயில்களிலும், நன்நடத்தைப்பள்ளிகளிலும் வாழ்வின் மூன்றில் இருபகுதியைச் செலவழித்துள்ளதாகவும் இந்தவிசாரணைகளின் போது அவர் ஒப்புக் கொண்டார்.

## நெடுங்கேணியில் இராணுவ அட்டகாசம்?

நெடுங்கேணி சனி

நெடுங்கேணிப் பகுதியில் இராணுவத்தினர் அட்டகாசம் செய்துவருவதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. இராணுவவீரர்கள் கடந்த சில நாட்களாக இரவு நேரங்களில் நெடுங்கேணிப் பகுதிக்கு வந்து வீதியால் செல்பவர்களை வெருட்டுவதுடன், வீதிகளில் நிற்கும் வாகனங்களைச் சோதிப்பதாகக் கூறியும் பொது சனங்களைத் துன்புறுத்துவதாகத் தெரியவருகிறது

அண்மையில் நெடுங்கேணியில் கடமையாற்றும் உயர் உத்தியோகத்தர் ஒருவரின் ஜீப் வண்டி ஒன்றும் இவ்வித அனுபவத்துக்குள்ளானதாகத் தெரிகிறது.

இராணுவத்தினரின் இச் செய்கைகள்பற்றி ஒரு முறையீட்டு மகஜரை நெடுங்கேணி கிராம முன்னேற்றச் சங்கச் செயலாளர் திரு. த. ம. பீற்றர் பொன்கலன்ட் வவுனியா எம் பி திரு. செல்லத்தம்புவுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

## கம்போடியாவுக்கு அமெரிக்க ஆயுதங்கள்

நாம்பென், ஜன. 23

கம்போடியப்படைகளுக்கு அமெரிக்க ஆயுத உதவி அளிப்பதென முடிவுசெய்துள்ளது.

அரசாங்கத்திற்குஎதிரான கம்யூனிஸ்ட் படைகள் கம்போடியத் தலைநகரான நாம்பென்னைக் கடுமையாகத் தாக்கினர். இதனால் அரசாங்கப் படைகளின் விமானங்கள் சேதமடைந்தன. இந்நிலைமையைச் சீர்திருத்துவதற்கு கம்போடிய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. கம்போடிய ஜெட் போர்விமானங்களும், அமெரிக்க ஹெலிகாப்டர்களும் நாம்பென் விமான நிலையத்தில் நிறுத்தப்பட்டுள்ளதாகவும், மேற்கொண்டும் தாக்குதல் நடைபெற்றால் அதனை முறியடிப்பதற்காக அவை நிறுத்திவைக்கப்பட்டிருப்பதாக ஓர் அதிகாரி தெரிவித்தார்.

## பிரிட்டன் நகர திட்டங்களில் இலங்கை அதிகாரி

லண்டன், ஜன. 23

இலங்கையர் ஒருவர் உட்பட 30 வெளிநாட்டு அரசாங்க அதிகாரிகள் தற்போது பிரிட்டனில் உள்ளூராட்சி நிர்வாக முகாமை முறைகள் பற்றிய பயிற்சித் திட்டமொன்றில் பங்கு பற்றி வருகின்றனர் இலங்கையின் ஸ்தலஸ்தாபன உதவிக் கமிஷனரான திரு டொனல்ட் ஈ. அபயசிங்கா கடந்த நான்கு மாதங்களாக பேர்மிங்ஹாம் சர்வகலாசாலையில் பெற்ற நடைமுறைப் பயிற்சியின் பலனாக தாம் இலங்கையின் எதிர்கால கிராமிய அபிவிருத்திக்கான பலநல்ல திட்டங்களை வகுத்துள்ளதாகக் கூறினார்.

பிரிட்டனின் நகர திட்டங்கள் தன்னைப் பெரிதும் கவர்ந்ததாகவும் கைத்தொழில் மயமாகி வரும் இலங்கை இவற்றைப் பெருமளவில் பின்பற்ற முடியுமெனத் தான் கருதுவதாகவும் திரு. அபயசிங்கா தெரிவித்தார்.

திரு. அபயசிங்கா பிரிட்டனின் உள்ளூர் அரசாங்க கல்வி நிறுவனம் ஒழுங்கு செய்தநான்குமாதபயிற்சித் திட்டத்தின்கீழ் பலகிராமிய நகரத்திட்டங்களைப்பார்வையிட்டதுடன் நகராட்சி மன்றங்களின் கல்வி குடியிருப்பு சுகாதார இலாக்காக்களுடன் சில நாட்கள் தங்கியிருந்து அவற்றின் நடைமுறைகளை நேரில் கண்டறிந்தார்.

## அரசின் நோக்கம்

சாய்ந்தமருது, சனி

கிராமங்களின் அபிவிருத்தி வேலைகளை அக்கிராமத்தில் உள்ள மக்களின் மூலமாகவேதான் நடாத்தவேண்டுமென்பதுதான் இந்த அரசாங்கத்தின் நோக்கமென்று கரைவாகு தெற்கு (சாய்ந்தமருது) கிராமசபை அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் கரைவாகுப்பற்றுப் பிரிவுக் காரியாதிகாரி திரு. எஸ். குமாரரட்ண கூறினார்.

## சாம்ராஜ்ய சங்க கவுன்சிலில் இலங்கையர்

லண்டன், ஜன 23

சாம்ராஜ்ய சர்வகலாசாலைகள் சங்கக் கவுன்சிலின் அங்கத்தவர் ஒருவராக வித்தியலங்கார சர்வகலாசாலையைச் சேர்ந்த பேராசிரியர் கே. டபிள்யூ. குணவர்த்தன நியமிக்கப்பட்டுள்ளார் லண்டனில் வெளியிடப் பட்டிருக்கும் மேற்படி சங்கத்தின் வருடாந்த அறிக்கையில் இத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாம்ராஜ்ய உபகார நிதிச் சலுகைத் திட்டத்திற்கு இந்த சர்வகலாசாலைகள் சங்கம் பொறுப்பாக இருக்கிறது. இத் திட்டத்தின் கீழ் 1970ம் ஆண்டு சாம்ராஜ்ய நாடுகளைச் சேர்ந்த 530 மாணவர்கள் பிரிட்டிஷ் சர்வகலாசாலைகளில் உயர் கல்வியை மேற்கொண்டனர். இவர்களில் எண்மர் இலங்கையைச் சேர்ந்தவர்கள்.

# இந்திரா காங்கிரஸ் அவசர ஆலோசனை

சென்னை, ஜன. 23

ஜகஜீவன்ராம் தலைமைக் காங்கிரசின் தமிழ் நாட்டுக்கிளை இன்று அவசரமாகக் கூடி தேர்தல் நிலைமையை ஆராய்ந்தது தி. மு. கழகத்துடன் நடத்தப்பட்ட தேர்தல் உடன்பாடு சம்பந்தமான பேச்சில் ஏற்பட்டுள்ள தேக்க நிலை பற்றிஆராயவே இக் கூட்டம் கூடியது.

தி. மு கழகத்துடன் லோகசபைத் தேர்தலில் தொகுதி உடன்படிக்கை ஏற்படுவதில் ஏற்பட்ட கருத்து வேற்றுமைகள் பற்றி இக் கூட்டத்தில் ஆராயப்பட்டது இக்கூட்டத்தின் முடிவில் 7 கட்சி கூட்டணியை தாங்கள் சிதைக்கவிரும்பவில்லை என்று தமிழ் நாடு காங்கிரஸ் கிளை செயலாளர் திரு. சுவாமிநாதன் தெரிவித்தார்.

ராஜ்ய கிளையின் கருத்து இன்று புதுடில்லியின் ஆரம்பமாகும் மத்தியக் குழுவில் தெரிவிக்கப்படுமென மத்திய பார்லிமெண்டறி போர்ட் உறுப்பினர் திரு. சி. சுப்பிரமணியம் தெரிவித்தார்.

ஜகஜீவன்ராம் தலைமைக் காங்கிரசுக்கு லோகசபை தேர்தலில் தமிழ்நாட்டில் 12 இடங்களை ஒதுக்குவதற்கு தி. மு. க. ஒப்புக் கொண்டதென்ற கருத்தை மீண்டும் முதலமைச்சர் கருணாநிதி மறுத்துள்ளார்.

நிஜலிங்கப்பா காங்கிரஸ் ஜனசங்குடன் கூட்டுச்சேர மறுத்தால் ஜனசங் தனியாகப் போட்டியிடுமென அதன் காரியதரிசி தெரிவித்துள்ளார்.

......

## தமிழரசுக் கிளை

வல்வெட்டித்துறை, சனி

தொண்டமனாறு தமிழரசுக்கிளை வாலிப முன்னணி திரு. செ. நாகலிங்கம் தலைமையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. நடப்பு வருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்: தலைவர்: சிவ. சுந்தரானந்தம், உப தலைவர்: பொ. தம்பிராசா, செயலாளர்: சி. ஞானேஸ்வரன், உப செயலாளர்: கி. சிவப்பிரகாசம், பொருளாளர்: சி. இராமச்சந்திரன், உப பொருளாளர்: பா. பாலகாந்தன், நிர்வாக சபை உறுப்பினர்கள்: வே. முத்து. சி. ஆனந்தவேல், இ. இராசசிங்கம், இ. திலகநாதன், க. மாணிக்கவாசகம், ஞா. ஆதிபரன், கி. கதிரமலை.

காங்கேசன்துறை ப. ச.

## புதிய தலைவர் தெரிவு 24-ல்

மாவிட்டபுரம், சனி

காங்கேசன்துறைப் பட்டினசபை புதிய தலைவர் தெரிவு இம்மாதம் 24-ம் திகதி காலை சபாமண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

காங்கேசன்துறைப் பட்டினசபைத்தலைவர் தெரிவில் எஸ். ஜே. வி. செல்வநாயகம் முன்னிலையில் 4 அங்கத்தவர்கள் சேர்ந்து செய்யப்பட்ட ஒப்பந்தப்படி இதுவரை தலைவராக இருந்த திரு. அ. ஜெ. பாலசிங்கம் தமது பதவியை அண்மையில் ராஜினாமா செய்தது தெரிந்ததே.

இதையடுத்து சபையின் புதிய தலைவருக்கான தெரிவு இம்மாதம் 24ம் திகதி யாழ் உள்ளூராட்சிஉதவி ஆணையாளரால் நடாத்தப்படவிருக்கிறது.

### மணிவாக்கு

மனிதன் நாணயமாக உழைத்து வாழ வேண்டியதே தர்மத்தின் அடிப்படையாகும். மந்திரத்தால் எதனையும் செய்துவிடமுடியாது. எமக்கு வேண்டிய உணவைக்கூட நாமே உற்பத்தி செய்யவேண்டும். —ராஜேந்திரப்பிரசாத்

ஈழநாடு

Colombo ... Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: ...

சாதாரண ஆண்டு தை மாதம் 11-ந் திகதி (24-1-71)

## அரசியல் அமைப்பும் ஆளும்கட்சிக்கொள்கையும்

புதிய அரசியல் அமைப்புச் சம்பந்தமான அடிப்படைத் தீர்மானங்கள் பலவற்றை வழிகாட்டி விடயக் குழுவுக்குச் சமர்ப்பித்திருந்ததுடன் அவற்றுக்குத் திருத்தம் கொண்டுவர விரும்பும் பொதுமக்களும் தங்கள் திருத்தங்களைத் தமக்கு அனுப்பிவைக்கலாமென்று அரசியல் அமைப்பு விவகார அமைச்சர் அறிவித்திருந்தார். உண்மையான ஜனநாயகத்துக்கு அமைச்சர் மதிப்பளித்து அதைப் பின்பற்ற முன்வந்ததற்காக அனைவரும் அவரைப் பாராட்டினர். பொதுவாகப் பல அம்சங்களிலும் அமைச்சர் சமர்ப்பித்த அடிப்படைத் தீர்மானங்கள் சிறந்து விளங்கிய போதிலும் இந்தத் தீர்மானங்களில் சில அம்சங்கள் அனைவரையும் திருப்திப்படுத்தக் கூடியதாக இல்லையென்றும் சில அம்சங்கள் பல பல சந்தேகங்களுக்கும் இடமளிப்பதாகவும் கருதி இவற்றுக்குத் திருத்தம் கொண்டுவர வேண்டியது அவசியமென்றும் திருத்தம் கொண்டுவரத் தயங்கக்கூடாதென்றும் நாமும் மற்றும் பலரும் யோசனை தெரிவித்திருந்தோம். அமைச்சர் சமர்ப்பித்த அடிப்படைத் தீர்மானங்களை ஆராய்ந்த அரசியல் கட்சிகளும் மற்றும் கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்ட அமைப்புக்களும் தனியார்களும் கூட அவற்றுக்குத் திருத்தம் கொண்டுவருவது பற்றியும் எப்படியான திருத்தம் கொண்டுவரப்படவேண்டுமென்பது பற்றியும் ஆலோசனை செய்து திருத்தங்களைத் தயார் செய்யவும் ஆரம்பித்துள்ளனர்.

இச்சமயத்தில்தான் அரசியலமைப்பு விவகார அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா, அரசியல் நிர்ணய சபையின் கூட்டத்தில், அரசியல் அமைப்புச் சம்பந்தமான அடிப்படைத் தீர்மானங்களுக்குக் கொண்டுவரப்படும் திருத்தங்கள் அரசாங்கத்தின் அடிப்படைக்கொள்கைகளுக்கு மாறானதாக இருக்கக்கூடாதென்றும் அரசியலை (தங்கள் கட்சி அரசியலை) மறந்துவிட்டு அரசியல் நிர்ணய சபைக்குத் தாங்கள் வரவில்லையென்றும் தெரிவித்திருக்கிறார்.

'ஐக்கிய முன்னணி ஆட்சிக்குத் தெரிவுசெய்யப்பட்டால் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் சபை அரசியல் நிர்ணய சபையாக மாறி, மக்கள் பிரதிநிதிகள் அரசியல் நிர்ணயசபை உறுப்பினர்களாகி இலங்கையை ஒரு சோஷலிஸக் குடியரசாகுவதற்கான புதிய அரசிலமைப்பு ஒன்றைத் தயாரிப்பார்கள்' என்று கூட்டணி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்திருந்தது உண்மை. வடக்கு கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த இதர மாகாணங்கள் கூட்டணியினரை மிகப் பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சி பீடத்துக்குத் தெரிவுசெய்து அனுப்பியதும் உண்மை. கூட்டணியின் கொள்கையை மக்கள் ஏற்றுக்கொண்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதால் அக்கொள்கையின் அடிப்படையில்தான் புதிய அரசியல் அமைப்பு உருவாக்கப்படவேண்டுமென்றால் இதர கட்சிகளினதும் இதர பிரதிநிதிகளினதும் உதவியும் ஒத்துழைப்பும் இல்லாமலே ஆளும் கட்சிப் பிரதிநிதிகளே அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்களாக மாறி புதிய அரசியல் அமைப்பை உருவாக்கிவிடலாம். ஆனால் அது நாட்டின் புதிய அரசியல் அமைப்பாக இருக்க முடியாது. ஒரு கட்சி அரசிலமைப்பாகத்தான் இருக்க முடியும். மற்றொரு கட்சிக்கோ கூட்டணிக்கோ அடுத்த தேர்தலில் இது போன்று மிகப்பெரும்பான்மைப் பலம் கிடைத்தால் இந்த அரசியலமைப்பையே மாற்றிவிடலாம்.

அரசியல் அமைப்பு அடிக்கடி மாற்றிக்கொள்ளக் கூடிய அரசியல் கட்சிகளின் கொள்கைத் திட்டங்களல்ல. புதிய அரசியல் திட்டத்தை உருவாக்குவதற்குத் தமது தேர்தல் விஞ்ஞாபனம் மூலம் பெரும்பான்மை மக்களிடம் கட்டளை பெற்ற கூட்டணியினர் 'இப்படித்தான் புதிய அரசியல் அமைப்பு இருக்கும்' என்று நகல் திட்டத்தையும் சமர்ப்பித்து அனுமதி பெற்றிருந்தால் 'அடிப்படைத் தீர்மானங்களுக்கும் திருத்தங்கள் கொண்டுவரலாம்' என்று அமைச்சர் கேட்கவேண்டிய அவசியமேற்பட்டிருக்காது.

சுரண்டல் ஒழிய வேண்டும்; சோஷலிஸ சமுதாயம் உருவாகவேண்டும்; உண்மையான தேசிய ஐக்கியம் ஏற்படவேண்டும்; நாடு முன்னேற வேண்டும்

இந்த அம்சங்களில் இந்த அடிப்படை இலட்சியங்களில்- இந்த நாட்டு மக்களுக்கிடையில் சாதாரண மக்களுக்கிடையில் அபிப்பிராய பேதம் இருக்க முடியாது. இவற்றை எப்படி அடைவதென்பதில்தான் வேறுபட்ட அபிப்பிராயமிருக்க முடியும்.

எனவேதான் நாட்டின் சரித்திரத்தையே மாற்றிப் புதிய சமுதாயத்தை உருவாக்குவதற்காக தயாரிக்கும் புதிய அரசியல் அமைப்பு அபிப்பிராய பேதங்களுக்கு இடமில்லாமல் கட்சி அரசியல் பிரச்சினைகளுக்கு அப்பால் நின்று சகலரும் ஒன்று சேர்ந்து ஒருமனதாக ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும்.

ஆளும் கட்சியின் அடிப்படைக் கொள்கைகளுக்கு மாறுபடாத வகையில்தான் புதிய அரசியல் அமைப்புத் தயாரிக்கப்படுமானால், அது உருவாக்கப்பட்டபின், நாட்டு மக்கள் அனைவரினதும் அங்கிகாரத்தை அது பெற வேண்டியது அவசியமாகும்.

# வருமானத்தில் வித்தியாசம் - சோஷலிஸம் எப்படித் தீர்வுகா...

உழைப்புக்குத் தக்க ஊதியம் என்ற கோட்பாட்டைச் சோஷலிஸம் அமுல்நடத்தி வருகிறது. இதனால் சோஷலிஸம் இன்னும் பூரண சமத்துவத்தை உறுதிசெய்ய இயலவில்லை. ஏனெனில் மனிதர்கள் எல்லாரும் ஒரே மாதிரியானவர்களாக இருக்கவில்லை. சிலர் வலிமை மிக்கவர்களாகவும் சிலர் பலவீனர்களாகவும் இருக்கின்றனர்; சிலர் திருமணமானவர்களாகவும் சிலர் திருமணம் ஆகாதவர்களாகவும் இருக்கின்றனர். சிலருக்குப் பல பிள்ளைகளும், சிலருக்குச் சில பிள்ளைகளும் உள்ளனர். இவ்வாறு எத்தனையோ வேற்றுமைகள்.

எனவே சமமான வேலைக்குச் சமமான ஊதியம் வழங்கினாலும்கூட, சிறு குடும்பத்துக்குக் கிட்டும் பொருளாயத வசதிகளைக் காட்டிலும் பெரும் குடும்பத்துக்குக் கிட்டும் பொருளாயத வசதிகள் இயல்பாகவே குறைவாக உள்ளன. சமுதாயத்தின் பொருள் உற்பத்திச்சக்திகள் அபிவிருத்தியடைந்து, எல்லோருக்கும் அவரவர் தேவைக்கேற்பப் பொருள்களை விநியோகிக்கக்கூடிய வாய்ப்பை உறுதி செய்யும் காலத்தில்தான் இத்தச் சமத்துவமின்மை மறையும்: சோஷலிஸ அரசில் பிரஜைகள் பெறும் வசதிகளில் காணப்படும் வேறுபாடுகளைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. குறைந்த பட்ச ஊதியத்தை அதிகரிப்பது, ஒப்புநோக்கில் குறைந்த வருமானமுள்ள உழைக்கும் மக்கள் மீது விதிக்கும் வரிகளைக் கணிசமான அளவுக்குக் குறைப்பது அல்லது அவற்றை முற்றிலும் போக்குவது. இத்தகைய பிரஜைகளுக்குக் கூடுதல் அநுகூலங்களை வழங்குவது முதலிய நடவடிக்கைகளின் மூலம் இந்நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்கிறது.

### மூன்றே மூன்று வரிகள்

சோவியத் மக்கள் அரசாங்க பட்ஜெட்டுக்கு விவசாய வரி, வருமான வரி. சிறு குடும்பத்தாருக்கும் பிரம்மச்சாரிகளுக்கும் விதிக்கப்படும் வரி ஆகிய மூன்றே மூன்று வரிகளை மட்டுந்தான் செலுத்துகின்றனர். கிராமப்புற மக்களில் பெரும்பான்மையாக விளங்கும் கூட்டுப்பண்ணை விவசாயிகள் விவசாய வரி ஒன்றை மட்டுமே கட்டுகின்றனர்.

கிராமங்களில் அநேகமாக ஒவ்வொரு குடும்பத்தவர்களும் கூடுதலான வருமானம் கொண்ட பழத்தோட்டத்தையோ அல்லது புழக்கடை காய்கறித்தோட்டத்தையோ பெற்றிருக்கின்றனர். இத்தகைய தோட்டத்திலிருந்து கிடைக்கும் வருமானம் கூட்டுப்பண்ணை வருமானத்தைவிட மேலதிகமாகக் கிடைக்கும் வருமானமாகும். விவசாய வரி விதிப்பு விகிதம் அவரவர் வசமுள்ள நிலத்தின் அளவைப் பொறுத்திருக்கிறது.

நகர மக்களும், மற்றும் அரசாங்க விவசாயப் பண்ணைகளில் பணியாற்றுபவர்களும் இரண்டு வரிகளை மட்டுமே செலுத்துகின்றனர்; ஒன்று வருமான வரி; மற்றொன்று சிறு குடும்பத்தாருக்கும் பிரம்மச்சாரிகளுக்கும் உரிய வரி.

மாதம் அறுபது ரூபிள்களுக்கு மேல் சம்பாதிப்போர் ஒவ்வொருவரும் வருமான வரி கட்டவேண்டும். வருமான வரி விகிதம் வருமானத்தின் அளவைப் பொறுத்ததாகும். (குறைந்த வருமானம் உள்ளவர்கள் விஷயத்தில்) 0.4 பதவீதத்தில் தொடங்கி, கூடியபட்சம் 13 சதவீதம் வரையிலும் வருமான வரி விகிதம் அதிகரித்துக் கொண்டுபோகிறது.

சிறு குடும்பத்தாருக்கும் பிரம்மச்சாரிகளுக்கும் உரிய வரியை 20 வயது முதல் 50 வயது வரையுமுள்ள மண...

பங்கு 7 சதவீத...

இரண்டாம் உ...
...ளை விலைத
சீர்செய்தபின்
...ப்பு படிப்படியா...
...பட்டது.

மக்கள் மீது...
வரிகளைப் படி...
குறைக்க வழி...
...கான ஒரு சட்...
...மே மாதத்தில்...
...கப்பட்டது. மக்...
விதிப்பதை முற்...
...விட்டுவிட வேண்...
பதுதான் இச்...
இறுதியான...
ஆகும்.

### உதவி வசதிக...

சோஷலிச நி...

**— எவ்கெனி ருத்கோவ்ஸ்...**

...மான ஆடவர்களும் பிரம்மச்சாரிகளும் செலுத்துகின்றனர். அதேபோல 20 முதல் 45 வயது வரையுள்ள மணமாகாத பெண்டிரும், மணமான பெண்டிரும் செலுத்துகின்றனர். இந்த வரி விதிப்பும் வருமானத்தின் அளவைப் பொறுத்ததே. இது குறைந்தபட்சம் 0.4 சதவீதமாகவும், கூடிய பட்சம் 6 சதவீதமாகவும் உள்ளது.

யுத்தப் பிற்கால ஆண்டுகளில், சோவியத்யூனியனது அரசாங்க பட்ஜெட்டில் கண்ட மொத்த வருமானத்தில் மக்களிடமிருந்து வரி வடிவில் வந்த வருமானத்தின் பங்கு சரிபாதியாகக் குறைந்து விட்டது. அதாவது 1945-ல் அதன் விகிதம் 14 சதவீதம். இப்போதோ அதன்...

விருந்து கிடைக்...
தான் சோவியத்...
பட்ஜெட் வ...
பெரும்பங்கு
எனவேதான் ...
...ந்து வரிகளின்
அற்ப... சோஷப...
...னத்... ...ய சோ...
பெற்று வந்த
அதனால் பெரு...
நிறுவிக் கொள்...

சோவியத் யூ...
ஏறத்தாழ மூவ...
படித்து வருகின்...
...தாயிரம் பேருக்...
...டர்கள் உள்...
கோடி மக்கள்
பெற்று வருகின்...
...வித் தொகை...
வருமானத்தில்...
...துக்கும் மேல்
...கின்றது.

ஆரம்பப் ப...
...ந்து பல்கலைக்...

# "குழந்தை தலையில் உலக்கை அடி விழுந்தது"

## திருநெல்வேலி இரட்டைக் கொலை வழக்கில் சாட்சியம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

"கொலைகள் நடைபெற்ற தினத்தன்று காலை எமது இல்லத்துக்கு மூன்றும் எதிரி மகேஸ்வரி வந்தார். எனது அக்காவின் இல்லற வாழ்க்கையிலுள்ள குறைபாடுகளை எடுத்துக்காட்டி அவர் உரையாடினார். ஒரு கட்டத்தில் குடும்பத்தைச் சீர்கெடுக்காதே என்று எனது தாயார் மூன்றும் எதிரியைப் பார்த்துச்சொன்னார். இதனால் கோபம்கொண்ட மூன்றும் எதிரி எனது தாயாருக்குச் செருப்பால் அடித்துவிட்டு 'ஒருகொலை நடக்கச் செய்யாமல் நான் பருத்தித்துறை போகமாட்டேன்' என்று சொன்னார், மூன்றும் எதிரி வாழுமிடம் பருத்தித்துறையே இவ்வாறுகச் சண்டை பிடித்துக்கொண்டு மூன்றும் எதிரி போய்விட்டார். அவர் போய்ச் சிறிது நேரத்தின்பின் தேசிக்காய் வியாபாரம் செய்துவிட்டு இறந்தவரான எனது அத்தான் வீடுவந்தார். தன்னை வழியில் சந்தித்த மூன்றும் எதிரி பயமுறுத்தல் வார்த்தைகளால் தன்னை ஏசியதாகச் சொல்லிவிட்டு அத்தானும் தோட்டத்திற்குப் போய்விட்டார்."

இவ்வாறு யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் சாட்சியமளித்த திருநெல்வேலியைச் சேர்ந்த தியாகராசா பெண் தவமணி என்பவர் சொன்னார். இவ்வழக்கில் கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26-ம் திகதி திருநெல்வேலியைச் சேர்ந்த நாகலிங்கம் என்பவரையும், ஆறுமாதக் குழந்தையான உதயணன் என்பவரையும் கொலைசெய்ததாக கணேசபிள்ளை, மகேஸ்வரி, கனகாம்பிகை, பரமானந்தன், மகேஸ்வரன் அல்லது குஞ்சுமணி ஆகிய ஐவர் மீது கோப்பாய் பொலிசார் குற்றம் சுமத்தியிருக்கின்றனர்.

இவ்வழக்கு யாழ். நீதிபதி திரு. கொலின் டி. மெண்டிஸ் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது தொடர்ந்து சாட்சியமளித்த தவமணி கூறியதாவது:

"அன்றைய தினமே அத்தான் இல்லாத நேரம் வீடு வந்த முதலாம்எதிரி கையில் கிறிஸ் கத்தி ஒன்றை வைத்துக்கொண்டு, எங்கே நாகலிங்கம்? என்று எங்களை வினவிக்கொண்டே வளவுக்குள்ளிருந்த கொட்டிலைப் பிடுங்கினார் பின்னர் கையிலிருந்த கிறிஸ் கத்தியால் முதலாம் எதிரி அம்மாவைக் குத்தினார். அந்தக் குத்து அம்மாவின் உள்ளங்கையில் பட்டது.

நாங்கள் கூக்குரல் போடுவதைக் கேட்ட தோட்டத்திலிருந்த அத்தானும் வீட்டுக்கு வந்தார். அத்தான் எமது வீட்டுப் படலையில் வர, முதலாம் எதிரி அத்தானைக் கிறிஸ் கத்தியால் குத்தினார். முதலாம் எதிரி குத்தும்போது, ஐந்தாம் எதிரி விறகு கட்டையால் அத்தானை அடித்தார். இந்தக் கலம்பகம் நடக்கும் போது இரண்டாவது எதிரியான மகேஸ்வரி எனது தாயாரை உலக்கையால் தாக்கினார். அந்த நேரத்தில் குழந்தையைக் கையில் வைத்திருந்த எனது அக்காவும், இறந்தவரின் மனைவியுமான மனோன்மணி குறுக்கே சென்று" எனது அப்பாவுக்கு அடியாதே என்றார் அப்போது இரண்டாம் எதிரி ஓங்கிய உலக்கை குழந்தை உதயணனின் தலையில் விழுந்தது என்றார். சம்பவ தினத்தில் பாவிக்கப்பட்டதாகக் கூறப்படும் உலக்கை, விறகுக் கட்டை ஆகியவற்றையும் சாட்சி அடையாளம் காட்டினார். சம்பவத்தில் சிலவற்றைக் கண்ட பாலராசா என்பவரும் சாட்சியமளித்தார்.

எதிரிகள் சார்பில் அட்வக்கேட் கே. வி. எஸ். சண்முகநாதனும் வழக்காளிகள் சார்பில் வழக்கறிஞர் ஜிம்மி இராசரத்தினம் கோப்பாய் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. வேல்சாமியின் உதவியுடன் ஆஜரானார். மேல் விசாரணையை நீதிபதி அடுத்த மாதம் ஐந்தாம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

(ஊர. நி)

## மனிதா...
## என்...
### இலங்கைய...

...கை...
...கைத்தொழில்...
...கத்தை இலங்...
...மாக்கும் விஷ...
...தாபிமானத்துட...
...கொள்ளும்படி...
தொழிலாளர்...
அரசாங்கத்தை...
...ளது.

திரு எஸ். ெ...
தலைமையிலான...
தொழிலாளர்...
இன்று பத்தி...
விடுத்துள்ள ...
...யில் இவ் கே...
விடுத்துள்ளது.
கையில் மேலு...
...டிருப்பதாவது:
வம்சா வழியி...
...த்தை நெரிக்கு...
...க்கை கடந்த ...
...ளாக ஆட்சி...
வரும் அரசா...
தொடர்ந்து க...
பட்டுவருகிறது...
...டத்தினால் பல ...
...கணக்கான மக்...
தொழில்களை இ...
கஷ்டநஷ்டங்க...
தொல்லைகளுக்கு...
...யுள்ளனர். இது...
...தனையில்லாமல்...
செயல்படுத்தப்...
...கின்றது. 'இ...
பிரஜைகளாக...
கொள்ளப்ப...
இலங்கைப் பி...
...கோராமலும் ...
தங்கியிருக்கப்ப...
வம்சாவழிப்...
இலங்கையிலிரு...
அவர்கள் ...
சட்டரீதியான...
...களையும் ...

# ...ம் - இதற்கு ...வுகாண்கிறது?

7 சதவீதம்தான்.
...ண்டாம் உலகப் போரி... விளைந்த சேதங்களை ...ய்தபின் வரிக்குறை... படிப்படியாக செய்யப் ...து.
...ள் மீது விதிக்கும் ...ளைப் படிப்படியாகக் ...க வழி காண்பதற் ... ஒரு சட்டம் 1960 ...சத்தில் அங்கீகரிக் ...டது. மக்கள்மீதுவரி ...தை முற்றிலும் கை ...விட வேண்டும் என் ...ன் இச் சட்டத்தின் ...சன குறிக்கோள் ...

ப்பு, பட்டமேற்படிப்பு மற்றும் தொழில் பயிற்சிக் கல்வி முதலியவை வரையிலும் சகலவிதமான கல்வி வசதிகள், மற்றும் சகலவிதமான மருத்துவ சேவைகள் சமூக இன்ஸுரன்ஸ், பென்ஷன் தொகைகள் மற்றும் உழைக்கும் மக்கள் அனைவரும் அனுபவிக்கும் வருடாந்தர லீவு வசதிகள், உழைக்கும் பெண்மணிகளுக்கும் பிரசவ காலத்துக்கு முன்னும் பின்னும் அளிக்கப்படும் லீவின் போது வழங்கும் உதவித் தொகைகள், மற்றும் ஆரோக்கிய வாசஸ்தலங்கள், விடுமுறை கால வாசஸ்தலங்கள் ஆகியவற்றில் இலவசமாகவோ குறைந்த கட்டணத்துக்கோ அளிக்கப்பெறும் இடவசதிகள் முதலியவையெல்லாம் அரசாங்கம் இலவசமாக வழங்கும் வசதிகளில் அடங்கும்.

## ...வசதிகள்

...ஷ்ய நிறுவனங்களி...

## ...காவ்ஸ்கி —

...கிடைக்கும் பணம் ...சோவியத் அரசாங்க ...ட் வருமானத்தில் ...பங்கு வகிக்கிறது. ...தான் மக்களிடமிரு ...வரிகளின் வடிவில் ...சாதபமாக வருமா ...ய சோவி... அரசு ... வந்த போதிலும், ... பெரும் நிதிகளை ... கொள்ள முடிகிறது. ...வியத் யூனியனில் ...ாழ மூவரில் ஒருவர் ... வருகின்றனர். பத் ...ம் பேருக்கு 27 டாக் ... உள்ளனர், 4.1 ... மக்கள் பென்ஷன் ... வருகின்றனர். உத ... தொகையாக தேச ...னத்தில் 21 சதவீதத் ... மேல் வழங்கப்படு ...து.
...ப்பப் பள்ளிகளிலிரு ...கலைக் கழகப் படி...

பொருளாதார நிபுணர்களின் கணிப்பின்படி பொது பயனீட்டு நிதியிலிருந்து ஒவ்வொரு சோவியத் குடும்பத்தின் தேவைகளுக்கும் ஆண்டொன்றில் சராசரியாக 750 ரூபிள்கள் வழங்கப்படுகின்றன என்று தெரிய வந்துள்ளது.

ஒரு குடும்பம் வரிகளின் மூலமாக அரசாங்கத்துக்குச் செலுத்தும்தொகையை விட இந்தத் தொகை கிட்டத்தட்ட ஐந்து மடங்கு அதிகமாகும். இந்த நிதியை 'இரண்டாவது ஊதியம்' என்று மக்கள் சிலசமயம் குறிப்பிடுவதில் ஒன்றும் வியப்பில்லை.

### பொருளாயதத் தூண்டுகோலாகவும் விளங்குகிறது

அடிப்படை ஊதியம் அவரவர்தம் உழைப்புக்கேற்ப வழங்கப்படுகிறது. ஆனால் இந்த 'இரண்டாவது ஊதியமோ' ஓரளவுக்குக் குடும்பத்தின் தேவைகளைக் கருத்தில் கொண்டு அதற்கேற்பவே வழங்கப்படுகிறது உதாரணமாக கிண்டர்கார்ட்டன் பள்ளியில் ஒரு குழந்தையைப் பராமரிப்பதற்காகும் செலவைப் பார்ப்போம். மாதம் ஒவ்வொருவரும் 50 ரூபிள்களுக்கு மேல் சம்பாதிக்காத ஒரு குடும்பத்தார் குழந்தையொன்றுக்கு 7 ரூபிள்கள் மட்டுமே கொடுக்கின்றனர். அதிக வருமானம் உள்ள குடும்பத்தாரோ 12 ரூபிள்கள் கொடுக்கின்றனர். வேறுவிதமாகச் சொன்னால் குறைந்த வருமானம் உள்ள குடும்பத்தார் அரசாங்கத்திடம் இருந்து 21 ரூபிள்களைப் பெறுகின்றனர். அதிக வருமானம் உள்ள குடும்பத்தாரோ 16 ரூபிள்களையே பெறுகின்றனர். மூன்று குழந்தைகளோ அதற்கு மேற்பட்ட குழந்தைகளோ உள்ள குடும்பத்தார் பெரும்பாலும் கிண்டர்கார்டன் பள்ளிக்குப் பணம் கொடுக்க வேண்டிய பொறுப்பிலிருந்து முற்றிலும் விடுவிக்கப்படுகின்றனர்.

பொதுப் பயனீடு நிதியிலிருந்து ஒவ்வொரு சோவியத் குடும்பத்துக்கும் வழங்கப்படும் தொகையும் அநுகூலங்களும், குறைந்த சம்பளம் பெறும் ஆலை, அலுவலக, மற்றும் பிற ஊழியர்கள் விஷயத்தில் அவர்கள் பெறும் ஊதியத்தில் 40 சதவீதமாகவும் மத்தியதர வருமானம் உள்ளவர்களின் ஊதியத்தில் சுமார் 25 சதவீதமாகவும் அதிகமான வருமானம் உள்ளவர்களின் விஷயத்தில் 15 சதவீதமாகவும் இந்த விகிதாசாரம் உள்ளது.

பொருளாதாரத் தூண்டுதல் கோட்பாடு சோவியத் யூனியனில் நன்கு பயனளித்து வருகிறது. பற்பல தொழிற் கல்வியையும் இலவசமாகக் கற்கும் அளவுக்கு தொழிற் பயிற்சிப் பள்ளிகளைப் பரந்த அளவுக்கு அமைத்திருப்பதன் மூலம் இந்தக் கோட்பாடு செயற்பட்டு வருகிறது.

# ...னிதாபிமானம் காட்டுக! ...என்கிறது காங்கிரஸ்

## ...கையர் மயதிட்டம்பற்றி அறிக்கை

கொழும்பு, சனி
...தொழில், வர்த்த... இலங்கையர் மய...ம் விஷயத்தில் மனி...ானத்துடன் நடந்து ...ளும்படி இலங்கைத் ...லாளர் காங்கிரஸ் ...ங்கத்தைக் கேட்டுள்...

...எஸ். தொண்டமான் ...மயிலான இலங்கைத் ...லாளர் காங்கிரஸ் ... பத்திரிகைகளுக்கு ...துள்ள ஓர் அறிக்கை ... இவ் வேண்டுகோளை ...துள்ளது. அந்த அறிக் ... மேலும் குறிப்பிட் ...தாவது: இந்திய ... வழியினரின் சமு... நெரிக்கும் நடவடி...டந்த பல வருடங்க... ஆட்சி பீடத்துக்கு ... அரசாங்களால் ...ர்ந்து கடைப்பிடிக்கப் ...வருகிறது. இத் திட் ...ால் பலபல நூற்றுக் ...ான மக்கள், தங்கள் ...ல்களை இழந்துபலவித ...நஷ்டங்களுக்கும் ...லைகளுக்கும் ஆளாகி ...னர். இது பற்றிய சிந் ...ில்லாமல் இத் திட்டம் ...ல்படுத்தப்பட்டு வரு...து. 'இலங்கைப் ...ஜைகளாக ஏற்றுக் ...ளப்படாமலும் ...கைப் பிரஜாவுரிமை ...மலும் இலங்கையில் ...விடுக்கப்பட்ட இந்திய ...வழிப் பிரஜைகள் ...கையிலிருக்கும் வரை ...கள் தங்களுடைய ...ரீதியான தொழில் ...ம் வேலைகளையும் எவ்வித தலையீடு மின்றித் தொடர்ந்துசெய்துவரலாம்'' என்று 1948-ம் ஆண்டில் இலங்கைப் பிரதமர் இந்தியப் பிரதமருக்கு வாக்குறுதியளித்திருந்தும் இந்திய வம்சாவழியினருக்குஇவ்வித தொல்லைகள் கொடுக்கப்படுகிறது.

தோட்டங்களில் குமாஸ்தாக்களாகவும் தொழில் நுட்ப உத்தியோகத்தர்களாகவும் கடமையாற்றி வந்த ஒரு சிறு தொகையினரான இந்தியவம்சவழியினர் சமீபத்தில் இந்த இலங்கையர் மயத்திட்டத்தினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்களென்றும் இவர்களில் பலர் இங்கு கடந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றியவர்களென்றும் மற்றவர்கள் இங்கேயே பிறந்தவர்களென்றும் அந்த அறிக்கை கூறுகிறது.

இந்தவயதில் அவர்கள் இந்தியா சென்றுபுதுவாழ்வு தொடங்க முடியாதென்றும் இவர்களைப் போன்ற இந்தியவம்சாவழியினர் விஷயத்தை அரசாங்கம் பரிசிலனை செய்யவேண்டுமென்றும் காங்கிரஸ் கேட்டுள்ளது. (சி பி ஏ.)

# சச்சிதானந்தர் சிஷ்யர்களின் யோக சாதனைகள்

-- கு. வி. ம. -

உலகாயுதக் கொள்கையின் தீவிர பற்றுடன் தலை நிமிர்ந்து நிற்பது மேற்கு. நாளும் பொழுதும் அதி தீவிரமாக வளர்ந்துசெல்லும் விஞ்ஞானத்தின் முன்னேற்றமே மனித இனத்தை இன்றைக்கு நிர்ணயஞ்செய்கின்றது என்ற செருக்கில்-கம்பீரமாக நிற்கும் மேற்கு கிழக்குக்குத் தலைவணங்குகின்றதா?

ஆச்சரியமாக மூக்கின் மேல் கைவைத்துச் சிந்திக்கத்தூண்டும் நிகழ்ச்சி என் கண்முன் துலாம்பரமாகத் தெரிந்தது.

சீவிப்பதற்கும் உல்லாச வாழ்க்கையை அனுபவிப்பதற்கும் முட்டுப்பாடற்ற அமெரிக்கர்கள் சிலர் கிழக்கின் ஆத்மீக ஞானியின் முன் தலைவணங்கி நின்ற காட்சியை கடந்த இருதினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் திவ்விய ஜீவன சங்கத்தினர் அமைத்த மண்டபத்திலே யோகிராஜ் சுவாமி சச்சிதானந்தஜி காட்டிய திரைப்படத்தில் கண்டேன்.

இந்தக்காட்சி ஒரு நாளைக்காக தயாரிக்கப்பட்டதல்ல. நியூயோர்க்நகரிலேசுவாமிஜீயின் ஆச்சிரமத்தில் வாரந்தோறும் நடைபெறும் சர்வசாதாரண நிகழ்ச்சியென்ற போது கிழக்குக்கு மேற்கு அமைந்துவிட்டது என்ற கருத்துத்தானே நமது இதயத்தில் எழும்புகின்றது.

அமெரிக்காவில் மட்டுமல்லாது சுவாமி சென்ற ஏனைய நாடுகளிலும் தனது யோகப் பணியை எப்படி நிலைநாட்ட முயன்றுரென்பதை இப்படங்கள் காட்டின.

கைளால் மூக்கைப் பிடிக்கிறார்கள். கழுத்திலே துளசி மாலைகள் கிழக்கின் கலாசாரத்தை மட்டுமல்ல ஆன்மீகப்பற்றின் பிடிப்புடன் மிளிருகின்றன. வாழ்க்கையின் வசந்தத்தில் கால் வைக்கின்ற யுவதிகளை மடக்கி-அவர்களின் இயங்களிலே நெறியை புகட்டுவதென்பது இலகுவல்ல. அன்பென்ற அங்குசமே அவர்களை அடக்க உதவிற்று போலும்!

உபாசனை, பிரார்த்தனையில் ஈடுபடுகின்றார்கள். 'ஓம்' என்ற பிரணவ மந்திரத்தை ஜெபிக்கும்போது உணர்வுகள் ஈர்க்காதவாறு கண்கள் மூடுண்டுள்ளன.

இத்தனைபேரும் இந்துக்களா? என்றால் அதுதான் இல்லை. மேற்கில் ஆளுகின்ற பல்வேறு மதத்தவரும் சமரச தெய்வீகத்தை வலித்துபெறமுயலும் நோக்குடன் சுவாமிஜியிடம் பிரசாதம் பெறுகின்றார்கள்.

நமது நாட்டில் மூலைமுடுக்கெல்லாம் கரடிபோல் கத்திலும் சமயசம்பந்தப்பட்ட பெருவிழாக்களில் சில ஆயிரம் பேரைக்கூடக் காணக் கிடைப்பது துர்லபம். ஆனால் அறுபது இலட்சம் மக்கள் திரண்டிருந்து ஒரு பெருவிழாவிலே சுவாமிஜியின் யோக உரையைக்கேட்க முயன்றுள்ளனர். அந்த இடத்தில் அமைதியைக் கட்டுக்குள் கொண்டுவர அரசாங்கமும் விழா அமைப்பாளரும் சுவாமிஜியையே நாடியுள்ளனர்.

கூட்டமைதானத்துக்கு சுவாமிஜி வருவதற்கு முடியாத நிலையில் அவரை அமைப்பாளர்கள் ஹெலிக்காப்டரில் கொண்டுசென்றனர்.

பல்கலைக்கழக மாணவர்கள் எதிலும் புதுமையை நாடித் தீவிரமாகச்செல்பவர்கள். ஆனால் அமெரிக்க பல்கலைக்கழகத்தைச்சேர்ந்த 400 மாணவர்கள் யோகப் பயிற்சி செய்தனர்.

நோய்களைத் தடுத்தற்கான யோகாசனப் பயிற்சிகள் அளிக்கப்பட்ட காட்சிகள் கண்ணைக்கவர்ந்தன. மூக்கின்மூலம் நூலைச் செலுத்தி பீனிச நோய் நிவாரண சாதனை செய்தார்கள். தண்ணீரை பருகி பித்தத்தை வெளிப்போக்கினார்கள்.

அமெரிக்கர்மூலம் யோக சாதனைகளை யாம் பயிலுவதற்குத்தான் இந்தத்திரைப் படக்காட்சியா? என்று கூட யான் யோசித்தேன்.

நம்மை நோக்கி எத்தனையோ வெளிநாட்டுப் புதுமைகள் வருகின்றன. அந்த வெளிநாட்டின் மோகத்தில் நாம் நம்மை மறந்து வெகுதீவிரமாகச் செல்லுகின்றோம்.

இந்தநிலையில் நமது இதயம் அமைதியென்ற ஓர் இலட்சியத்துக்காக ஏங்குவதை நாம் ஏன் உணரவில்லை அந்தஅமைதிஎத்தனை அவசியமென்பதை செல்வச் செருக்கில் மிதந்த அமெரிக்கர்கள் வலிந்து பிடித்துக்கொள்ள முயல்வதைக் கண்ணுற்கண்டபோது வியந்தேன். யோகம் நமது அருகிலிருக்க ஏன் போகத்தை நாம் நாடவேண்டும்?

இந்தக் கேள்வியுடன் திரும்பினேன்.


யாழ். நகரின்

கருமத்திலேயே கண்ணுயிருப்பவர்

ராஜா

செங்கோலோச்சும் ராஜா அல்ல; மக்கள் தேவையே தங்கள் தலையாய சேவை எனக் கொள்ளும் இவர்களே.

ராஜா கோர்ப்பரேஷன்

கொழும்பில் பிரபல ராஜா கோர்ப்பரேஷனின் புதிய 5வது கிளை இங்கே...

104, ஆஸ்பத்திரி ரோட்,

யாழ்ப்பாணம்.

இன்றே விஜயம் செய்து

உங்களுக்குத தேவையா ன

- பால் உணவுப் பொருட்கள்
- சாய்ப்புச் சாமான்கள்
- பலசரகுச் சாமான்கள்
- பாடசாலை உபகரணங்கள்

இன்னும் பிறவற்றையும் குறைந்த விலையில் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்று பூரண திருப்தியடையுங்கள்.


## வாத்தகப் பயிற்சி

கிளிநொச்சி, சனி

யாழ்ப்பணம் கனிஷ்ட பல்கலைக்கழகத்தில் கணக்கியல் வர்த்தகப் பிரிவுகளில் தற்போது கல்விபயிலும் மாணவர்களுக்கு வர்த்தகப் பிரிவு சம்பந்தப்பட்ட விடயங்கள் பற்றி நேரடிப் பயிற்சிவகுப்புகளை கல்வி இலாகாவினர் ஒழுங்கு செய்துள்ளனர்.

யாழ் மாவட்டத்தில் பரந்தன் யாழ்ப்பாணம்வடமராட்சி, வலிகாமம் பிரிவுகளில் உள்ள கூட்டுறவுவங்கிகளில் வங்கி நடைமுறைக் கணக்குகள், கணக்குப் பதிவேடுகள் வங்கித் தொடர்புகள் பற்றிய பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறது

## கிராம சபை பாராட்டு

மாவிட்டபுரம், சனி

யாழ்ப்பாணத்தில் பூரண பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவுவதற்கு தபால் அமைச்சர் குமாரசூரியரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை இச்சபை பாராட்டுவதுடன் இதுவிடயமாகத் தொடர்ந்து துரித நடவடிக்கை எடுத்து இவ்வாண்டு முடிவதற்குள் மேற் குறித்த பல்கலைக் கழகத்தை நடைமுறையில் செயல்படுத்துவதற்கு நடவடிக்கைஎடுக்கப்பட வேண்டும்.

இவ்வாறு தபால் தந்தி அமைச்சரைக் கோரும் தீர்மானமொன்றை தெல்லிப்பழைக் கிராமசபை நிறைவேற்றியுள்ளது.

## சிரிக்கலாம்!

புவியியல் ஆசிரியர்:- எடே காந்தன் யாழ்ப்பாணத்தில் எந்தப் பகுதியில் சிவந்தமண் பிரதேசம் காணப்படுகிறது?

காந்தன்.- சார் யாழ்ப்பாணத்தில் வெலிங்டன் வெண் திரையில் மட்டுமே காணப்படுகின்றது.

0

தாயார்:- எடே ராமு இஞ்சைவா உனக்கு இரண்டு கன்னத்திலை தாறன்?

ராமு:- ஏனணை நான் உங்களை கவந்தே அடி வாங்கவேணும்.

0

தகப்பன்:- என்னடா மேனை படத்துக்குப் போனாய், இப்பபாத்தால் தலையிலை காயத்தோடைவாறாய் மடுவத்திலை யாரோடை சண்டை பிடிச்சனி?

மகன்:- இல்லை அப்பு - சிவந்தமண் படத்திலை சிவாஜி கணேசனுக்கு நம்பியார் அடிக்க, எனக்குப் பின்னால் இருந்த சிவாஜிப்பித்தன் உணர்ச்சிவசப்பட்டு என்னை மண்டையிலை டோச் சாலை அடிச்சுப்போட்டான்.

ரீ. ஆர். நாதன்.

# ‘இந்துசமய அடிப்படையே சமரசத்துக்கு வித்தாகும்’

-- யோகிராஜ்

யாழ்ப்பாணம், ஞாயிறு

“சமயக் கருத்துக்களைப் பரந்த நோக்கத்துடன் ஏற்றுக்கொள்பவர்களே மேலை நாட்டினர். இந்துசமயத்தின் அடிப்படையைப் புரிந்து கொண்டவர்கள் பிற மதங்களையும் ஏற்றுக்கொள்வார்கள் மத பேதத்தினால் எவரையும் புறக்கணிக்க மாட்டார்கள்”

இவ்வாறு யோகிராஜ் சுவாமி சச்சிதானந்தஜிநேற்றுமுன்தினம் நடைபெற்ற திவ்யஜீவன்சங்கப்பாராட்டுவிழாவில் பேசும்போது தெரிவித்தார்.

அவர் பேசும்போது மேலும் தெரிவித்தவை வருமாறு:

எல்லா உலகமும் ஆனாய் நீயே என்றபடி சமரசம் காட்டுகிறது இந்துசமயம். பொதுவாக எல்லாச் சமயங்களையும் மதிக்கின்ற தன்மை இந்துசமயத்தின் பொதுப் படையாகும்’ தண்ணீர் எங்குமுள்ளது. அதனைப் பக்குவமாகப் பெற்று பிரயோசனப் படுத்தவேண்டும். சந்தேகங்களை அகற்றி மன உறுதியுடன் தவவாழ்வு கொள்ளவேண்டும்.

மேல்நாட்டில் கன்னியாஸ்திரிமடங்களிற் கூட யோகப் பயிற்சி பயின்று பலர் மனச்சாந்தி பெற்றுள்ளனர் யோகம் எல்லாமதத்திற்கும் பஞ்சாமிர்தம் போன்றது அமெரிக்காவில் கஞ்சா போன்ற மஸ்துக்களால் பலர் சீரழிந்து போகாமல் யோகம் நித்திய தவத்திற்கு வழிவகுக்கிறது; 60 லட்சம் பேர்கொண்ட மாசபையிற் கூடநான் தெய்வீக யோகம் பற்றி பேசியள்ளேன். அமைதியுடனும் கட்டுக்கோப்புடனும் அதனைக்கேட்டுள்ளனர்.

இரண்டாவது நாள்நிகழ்ச்சியாக திவ்விய ஜீவனசங்க மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவுக்கு திரு. எஸ் சூரசங்காரன் தலைமை தாங்கினார். (கு. வி. ம.

# “ஒரே கட்சியாக இயங்க வேண்டும்” —இலங்கரத்தின

கோகிலை, சனி

சிறிலங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட்கட்சி ஆகிய 3 கட்சிகளும் சகல பொதுவிடயங்களிலும் ஒரே கருத்துக்களையே கொண்டுள்ளன. வெளிநாட்டு கொள்கை சம்பந்தமாக அரசாங்கத்தின் கொள்கையையும் அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். அப்படியிருக்க இம்மூன்று கட்சிகளும் ஒரே கட்சியாக இயங்காமல் வெவ்வேறு கட்சிகளாக இயங்குவது ஏன்? என்று உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்தின கேட்டார்.

கண்டியிலுள்ள மகாவித்தியாலயம் ஒன்றில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அமைச்சர் இப்படிக் கூறினார்.

திருஇலங்கரத்தின மேலும் கூறியதாவது: 3 கட்சிகளையும் ஒன்றிணைத்து.இலங்கை சோஷலிசகட்சி என்று அழைக்கப்பட வேண்டும். 3 கட்சியினரும் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவைத் தலைவராக ஏற்றுக் கொண்டுள்ளதால் புதிய கட்சிக்கும் அவரே தலைமை தாங்கவேண்டும்.

நாட்டுமக்கள் பண்டாரநாயக்காவின் கொள்கைகளை நிறைவேற்றும் பாரிய பொறுப்பை இம் மூன்று கட்சிகளிடமும் கையளித்துள்ளனர்.எனவே மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்று முகமாக 3 கட்சியினரும்,ஒரே கட்சியாக இணைந்து செயற்பட வேண்டும்.

# பணம் பறித்ததான வழக்கில் எதிரி விடுதலை

யாழ்ப்பாணம், ஞாயிறு

“நீர்வேலியிலுள்ள தேநீர்க்கடை ஒன்றில் நான் தேநீர் அருந்திக்கொண்டிருந்தபோது என்னைவந்து எதிரி கூப்பிட்டார். கூப்பிட்ட எதிரி பத்துரூபா கடன் கேட்டார். நான் இல்லை என்றேன். இந்த நேரத்தில் எனது சட்டைப் பைகளில் ஆயிரம் ரூபாயும் மூவாயிரம் ரூபாயுமாக இருந்தன. நான் இல்லை என்று சொன்னதால் கோபமடைந்த எதிரி என்மீது பாய்ந்து சேட்டைக்கிழித்தார். இதன்காரணமாக ஆயிரம் ரூபாய் இருந்த பை கிழிந்ததால் ரூபாய்த்தாள்கள் கீழே சிதறின. அப்போது இருவரும் ரூபாய்த் தாள்களை எடுக்க ஆரம்பித்தோம். நான் இருநூறு ரூபாயைப் பொறுக்கினேன். எதிரி எண்ணூறு ரூபாயைப் பொறுக்கிக்கொண்டு ஓடிவிட்டார். நான் மற்ற மூவாயிரம் ரூபாயைதேநீர்க்கடை உரிமையாளரிடம் கொடுத்துவிட்டு, கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்குப் போய் புகார்செய்தேன். பொலிசில் இருநூறுரூபாவையும் கிழிந்த நாஷனல், பெனியன் ஆகியவற்றையும் ஒப்படைத்தேன். எதிரி எனக்கு அடிக்கவில்லை.”

இவ்வாறு யாழ். நீதிமன்றத்தில் சாட்சியமளித்த திருகோணமலையிலுள்ள மில் உரிமையாளரான கதிரிப்பிள்ளை கந்தையா என்பவர் சொன்னார். இவ்வழக்கில் கந்தையாவின் பணத்தைப் பறிமுதல்செய்ததாக நீர்வேலியைச் சேர்ந்த பூபாலசிங்கம் பாலசுந்தரம் என்பவர்மீது கோப்பாய் பொலிசாரால் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. தேநீர்க்கடை உரிமையாளரான இளையதம்பி கதிரவேலுவும் சாட்சியமளித்தார் விசாரணை முடிவில் சாட்சியங்கள் போதாததால்,நீதிபதி திரு. கொலின்டீமென்டிஸ் எதிரியை விடுதலைசெய்து தீர்ப்பளித்தார்.

(ஊர. நிரு.)

—

## புதுக்குடியிருப்பு கி.ச. புதியதலைவர்

புதுக்குடியிருப்பு, சனி

புதுக்குடியிருப்பு கிராம சபையின் புதிய தலைவராக 2-ம் வட்டார அங்கத்தவரும் பழைய தலைவருமாகிய சி. சிதம்பரப்பிள்ளைபோட்டியின்றி தெரிவுசெய்யப்பட்டார்.

நேற்று முன்தினம் வவுனியா உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. தேவரத்தினம் டான்போத் தலைமையில் தெரிவுநடைபெற்றது.

உபதலைவராக 4-ம் வட்டார அங்கத்தவர் பொ. பாலசிங்கம் போட்டியின்றி தெரிவுசெய்யப்பட்டார்:

# வடபகுதியில் 25 பெரிய ஆரம்ப கூட்டுறவுச்சங்கங்கள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

மறு சீரமைப்புத் திட்டத்தின்கீழ் வடபகுதியில் இருபத்தைந்து பெரிய ஆரம்ப சங்கங்கள் நிறுவப்படஇருக்கின்றன. இவற்றில் இருபது சங்கங்கள் யாழ்ப்பாணம் கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் பகுதியிலும் ஐந்து சங்கங்கள் வவுனியா யாழ்ப்பாணம் கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் பகுதியிலும் நிறுவப்படும். இச் சங்கங்கள் நானூறுக்கு மேற்பட்ட கிளைகளினூடாக இயங்கும்.

யாழ்ப்பாணத்தில் மொத்தம் 32 பெரிய ஆரம்பச்சங்கங்கள் நிறுவுவதென முன்னர் முடிவு செய்யப்பட்டிருந்தது. ஆயினும் சங்கங்கள் பொருளாதார ரீதியில் வெற்றிகரமாக இயங்கவேண்டுமென்பதையும் எல்லைப் பரப்பைக் குறைப்பதில் பொருளாதார ரீதியில் சங்கங்கள் பின்தங்கிவிடும் என்பதையும் கருத்திற்கொண்டு இவ்வித குறைப்பு நடைபெற்றுள்ளது பணியாளர்களின் அடிப்படை ஊதியம் அதிகரிக்கப்படவிருப்பதால் சங்கங்களை குறைப்பதன் மூலம் திறம்பட அவற்றைச்செயற்படுத்த முடியும் என கூட்டுறவு வட்டாரம் கருதுகிறது.

புதிய சங்கங்கள் அமையவிருக்கும் பகுதிகளின்விபரம் வருமாறு:

யாழ் மாநகரசபைப் பகுதி நல்லூர் கி. ச, கொக்குவில் கி ச, சாவகச்சேரி நகரசபை -கி ச, கைதடி நாவற்குளி கி ச, மிருசுவில், கச்சாய் வரணி கி சபைகளுக்கு பொதுவில், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை ந. ச, குடத்தனை கி. ச. நெல்லியடி ப ச, கடைவேலி கி ச, உடுப்பிட்டி கி ச. புலோலி கி ச, சுன்னாகம் ப ச, ஏழாலை கி ச. உடுவில் கி ச, தெல்லிப்பளை கி ச. காங்கேசன்துறை ப ச, மயிலிட்டி கி ச, மல்லாகம் கி. ச. அளவெட்டி கி ச, சங்கானை ப ச. மானிப்பாய் ப ச. மானிப்பாய் கி ச, வட்டுக்கோட்டை கி ச. சுராலி கி ச, சுழிபுரம் கி ச, பண்டத்தரிப்பு ப ச, பண்டத்தரிப்பு கி ச, நீர்வேலி கி ச, உரும்பிராய் - ஊரெழு ப ச, கோப்பாய் கி ச, புத்தூர் கி ச, அச்சுவேலி கி ச, புங்குடுதீவு கி ச, நயினாதீவு கி ச, நெடுந்தீவு கி ச ஊர்காவற்றுறை ப ச, நாரந்தனை கி ச, அனலைதீவு கி ச, எழுவைதீவு கி ச வேலணை கி ச, அல்லைப்பிட்டி கி ச, மண்டைதீவு கி ச, காரைநகர். கி ச.

உத்தேச பெரிய ஆரம்ப சங்கங்கள் பின்வரும் இடங்களில் அமையவிருக்கின்றன என அறியப்படுகிறது

கொட்டடி திருநெல்வேலி சாவகச்சேரி,கைதடி கொடிகாமம், பருத்தித்துறை, நெல்லியடி, உடுப்பிட்டி, புலோலி, சுன்னாகம் தெல்லிப்பளை, அளவெட்டி, சங்கானை, பண்டத்தரிப்பு, நீர்வேலி, புத்தூர், புங்குடுதீவு ஊர்காவற்றுறை, வேலணை காரைநகர், பளை பரந்தன் கிளிநொச்சி, பூநகரி, துணுக்காய்

இம் மாதம் முடியுமுன் தென்மராட்சியில் கொடிகாமம், சாவகச்சேரி, கைதடி ஆகிய 3 சங்கங்களும் அளவெட்டி அச்சுவேலியில் 2 சங்கங்களும் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் துரிதமாக நடைபெறுகிறது.

## “சலுகைகோரி வரவேண்டாம்”

காலி, சனி

“பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைக் கொழும்பு றோயல் கல்லூரியில் சேர்க்க முயற்சிக்கக்கூடாது ஆக் கல்லூரியில் உள்ளது போன்ற கல்வித்தரத்தை ஒவ்வொரு கல்லூரியிலும், ஒவ்வொரு பிள்ளைகளுக்கும் வழங்குவதற்கு அவர்கள் முயற்சி எடுக்கவேண்டும்.”

பெந்தர எல்பிட்டியா தொகுதியிலுள்ள இறமுல வித்தியாலயத்தில் நடந்த கூட்டத்தில் கல்வி அமைச்சின் மேலதிக நிரந்தரக் காரியதரிசி திரு. கே. எச். எம். சுமதிபாலா பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

ஆரம்பத்தில் ஆசிரியராக இருந்துபடிப்படியாகப்பதவி உயர்வு பெற்றுக்கல்வி அமைச்சின் மேலதிக நிரந்தரக்காரியதரிசியாக நியமிக்கப்பட்ட திரு. சுமதிபாலாவைவரவேற்பதற்காக அவரது சொந்த ஊரில் இந்தக்கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது.

திரு. சுமதிபாலா மேலும் கூறியதாவது: நான் என்றும் தவறுசெய்யமாட்டேன்; எவருக்கும் சலுகை யளிக்கமாட்டேன். என் கிட்டிய உறவினராக இருந்தாலும் சரி, என் உற்ற நண்பனாக இருந்தாலும்சரி நான் எவருக்கும் உதவிசெய்ய மாட்டேன். ஆதலால் தயவு செய்து எவரும் என்னிடம் சலுகைகோரி வரவேண்டாம்”

— —

## ஆசிரியர்கள் தட்டுப்பாடு அதிபர்கள் கவலை

பருத்தித்துறை, சனி

வடமராட்சிப் பகுதியிலுள்ள பாடசாலைகளில் பெருமளவு ஆசிரியர்பற்றாக்குறை நிலவுகிறது. பல பாடசாலைகளில் ஆசிரியருக்கான ஏழு, அல்லது எட்டுக் காலியான இடங்களாக விடுப்பதால் அப்பாடசாலைகளுக்கான நேரசூசிகளைத் தயாரித்து பாடசாலைகளை இயக்குவது அதிபர்களுக்குப் பிரச்சினையாக இருக்கிறது. புதிய மாணவர்கள் அனுமதி காரணமாக சிக்கல் மேலும் வலுவடைந்து வருகிறது. சேவை-வசதிக் கட்டணத்தின்மூலம் தற்காலிக ஆசிரியரை நியமிக்க அனுமதி வழங்குமாறு வடமாநிலக் கல்வியதிபதியிடம் சில அதிபர்கள் கேட்டுள்ளதாகவும் தெரிகிறது.

—

## 2500 ரூபா பெறுமதியான தளபாடங்கள்

ஊரதீவு, சனி

இரண்டாயிரத்து ஐநூறு ரூபாய் பெறுமதியான தளபாடங்கள் கல்விப்பகுதியால் புங்குடுதீவு ஸ்ரீகணேச வித்தியாசாலைக்கு வழங்கப்பட்டுள்ளன.

இத் தளபாடங்களை பாடசாலைத் தலைமையாசிரியர் திரு. நா. கார்த்திகேசு பொறுப்பேற்றார்.

கிளிநொச்சியில்

## குடும்பக்கட்டுப்பாடு திட்டம் வெற்றிபெற்றது

கிளிநொச்சி, சனி

கிளிநொச்சிப் பகுதியில் குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டம்வெற்றிஅளித்துள்ளதாக கிளிநொச்சிப் பகுதி சுகாதார வைத்தியஅதிகாரி டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளை தெரிவித்தார்.

இப்பகுதியில் குடும்நலத் திட்டப்பிரசாரம் மிகமிக சிறந்தமுறையில்நடைபெறுவதாகவும், மருத்துவமாதுகள் விவசாயப் பிரிவுகள் தோறும்வாரவாரம்சென்று பொதுமக்களுக்கு குடும்ப நலத் திட்டம் பற்றிய பலா பலன்களைச் செவ்வனே விளக்குவதாகவும் கூறினார்.

இவ்விடயம் பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில் தினமும் வைத்திய நிலையத்துக்கு வந்து மாதர்கள் குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்ட மருத்துவம் பெற்று வருவதாகவும் இத்திட்டம் பற்றிப் பொதுமக்களின் மத்தியில் இருந்த அச்சம் தற்போது நீங்கியுள்ளதாகவும் தெரிவித்தார்.

......

## முல்லைத்தீவு ஆஸ்பத்திரியின் நிலை

முல்லைத்தீவு, சனி

முல்லைத்தீவு அரசினர் ஆஸ்பத்திரியில் சேவை செய்த அம்புலன்ஸ் பல மாதங்களாகப் பழுதடைந்துள்ளது. இன்றுவரை புதிய அம்புலன்ஸ் கிடைக்கவில்லை முக்கிய ஊசிமருந்துகளும் குளிசைகளும் ஆஸ்பத்திரியில் இல்லையென்றும் பல தடவை மேலதிகாரிகட்கு எழுதியும் பலன் கிடைக்கவில்லையென்றும் தெரிகிறது.

— —

## ஞாபகார்த்த ஆராதனை

யாழ்ப்பாணம், ஞாயிறு

காலஞ்சென்ற ராமுச் சட்டம்பியாரினதும் அவர் பாரியார் லைசா சின்னுச்சியினதும் ஞாபகார்த்தக் கூட்டமும் தோத்திர ஆராதனையும் கட்டைவேலி மெதெடிஸ்த திருச்சபை ஆலயத்தில் நடைபெற்றது. சபைப்போதகர் கனம் ஜி. ஏ உவிஸ்லோ தேவநற்கருணைநடத்தினார்.

இளைப்பாறிய உபதேசியார் திரு. ஏ. டி. சிதம்பரப்பிள்ளை’ ஏ டி.சுப்பிரமணியம் ஆகியோர் காலஞ்சென்ற பெரியோர்களது சேவை நலத்தைப்பாராட்டிப் பேசினர்.

ஆராதனை முடிவில் அன்னாரின் ஞாபகச் சின்னமாகக் கட்டப்பட்டமன்னலைச் சபைப்போதகர்திரைநீக்கஞ் செய்து வைத்தார். அவர்களின் படமும் திரைநீக்கஞ் செய்யப்பட்டது.

## அமைச்சருக்கு புகார்

ஊரதீவு, சனி

வாரத்தில் இரு நாள் நடைபெறும் ஊரதீவு அரசினர் வைத்தியசாலை ஒழுங்காக நடைபெறுவதில்லையென்றும், இங்கு வந்து சிகிச்சையளிக்கும் புங்குடுதீவு ஆஸ்பத்திரி உதவி வைத்திய அதிகாரி சிலசமயங்களில் வராதுவிட்டுவிடுவதாகவும், இதனால் ஊரதீவு மக்கள் பெரும் கஷ்டத்திற்குள்ளாகி வருவதாகவும் ஊரதீவு இளந்தமிழர் மன்றம் சுகாதார அமைச்சருக்கு அறிவித்துள்ளது.

இவ்வைத்தியசாலைக்கு டாக்டர் வராத நாட்களில் நோயாளர், பஸ் போக்குவரத்து ஒழுங்கீனம் காரணமாக நான்கு மைல் தூரம் நடந்துசென்று புங்குடுதீவு ஆஸ்பத்திரிக்குச் செல்லவேண்டியிருப்பதாயும், இக்கஷ்டத்தைத நிவர்த்திக்க ஆவனசெய்யுமாறும் அமைச்சரை மன்றம் கோரியுள்ளது

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

ஞாயிறு 24—1—71

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அலை 61 மீ.
காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 கத்தோலிக்க நற்சிந்தனை, 6-35 திருப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-30 கிறிஸ்தவ நிகழ்ச்சி, 8-15 இன்னாமியகீதங்கள்,

344 மீ. அலை 49 மீ.
பகல் 12-00 தொழிலாளர் கேட்டவை, 1-00 கதம்ப இசை.

344 மீ. அலை 61 மீ.
மாலை 4-25 பாடசாலை நிகழ்ச்சிகள், 5-00 பிறந்த தின வாழ்த்துக்கள், 5-30 நாளையசந்ததி.

இரவு 6-15 வாத்திய இசை, 6-30 நாட்டுப்பாடல்கள், 7-15 பாட்டு, 7-45 நேயர் கடிதங்கள், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-40 பாட்டு, 10-30 செய்தித்தொகுப்பு.

......

## திறப்பு விழா

மாதகல் சனி

மாதகல் புனித சூசையப்பர் மகாவித்தியாலய திறந்த வெளியரங்குத் திறப்புவிழா இம்மாதம் 25ந் திகதி வடபகுதி பிரதம கல்வி ஆலோசகர் திரு. ஏ. சந்திரசேகரம்பிள்ளை தலைமையில் நடைபெறவிருக்கிறது.

யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகரா, திரு. வி. பொன்னம்பலம், காங்கேசன்துறை எம்.பி. திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் உட்படப் பலர் உரையாற்றுவர். கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

— —

## கந்தபுராண சபைக்கூட்டம்

தாவடி, சனி

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் கந்தபுராண சபைக்கூட்டம் இம் மாதம் 26-ம் திகதி நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

## தமிழாசிரியரும் சிங்களமும்

மானிப்பாய், சனி

இடமாற்ற அறிவித்தல்கள் தனிச் சிங்களத்திலேயே வருவதால் வடபகுதியிலுள்ள தமிழாசிரியர்கள் பெரிய திண்டாட்டமடைகின்றனர். அதில் குறிப்பிடப்பட்ட திகதி மாத்திரமே அவர்களுக்கு விளங்கக் கூடியதாயிருக்கிறது. அத்திகதியில் தாங்கள் எங்கே போக வேண்டும் என்பதை அறிய அவர்கள் பெரிய பாடுபடுகின்றனர்.

—

## மேலதிக தபால்சேவகர்

ஊர்காவற்றுறை... ஊரதீவு, சனி

புங்குடுதீவு நெடுந்தீவு வேலணை ஆகிய இடங்களில் உள்ள தபாற்கந்தோர்களுக்கு மேலதிகமாக ஒவ்வொரு தபால் சேவகர்களை உடனடியாக நியமிக்கத் தபால் பகுதி இசைந்துள்ளதாகவும் மண்டைதீவு உபதபாற்கந்தோருக்கு மேலதிகமாக ஒரு தபாற் சேவகர் அடுத்த நிதியாண்டில் நியமிக்கப்படுவார் எனவும் அறியப்படுகிறது.

— —

## தபால் மந்திரிக்கு மகஜர்

சுழிபுரம், சனி

சுழிபுரம் மேற்கு இருத்தலடிப் பகுதியில் ஓர் உப தபால் கந்தோர் உடன் திறக்கப்படவேண்டும் என்று சுழிபுரம் மேற்கு கலைமகள் சனசமூக நிலையத்தினர் தபாலமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியருக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

— —

## மின்சாரம் இல்லை

தாவடி, சனி

காங்கேசன்துறை வீதி கொக்குவில் குளப்பிட்டிப் பகுதிகளில் போடப்பட்டிருக்கும் மின்சார விளக்குகள் எரியாதபடியால் பாதசாரிகள் மிகக் கஷ்டமுறுகின்றனர்கள். லக்சபான மின்சாரம் வந்தபின்னுங்கூட இந்நிலை மாறவில்லையெனப் பொதுமக்கள் கவலையடைந்துள்ளனர்.

## சின்ஹா கவர்னராக நியமனம்

புதுடில்லி, ஜன. 23

மத்தியப் பிரதேச கவர்னராக திரு. சத்தியநாராயண சின்ஹா நியமிக்கப்பட்டுள்ளார். இவர் மார்ச்மாதம் புதிய பதவியை ஏற்பார் எனஎதிர்பார்க்கப்படுகிறது. கே. சி. ரெட்டியின் இடத்திற்கு இவர் நியமிக்கப்பட்டுள்ளார். 40 வருட அரசியலின் பின் இப்பொழுது இப்பதவியைப் பெறுகிறார். 22 வருடகாலமாக இவர் மத்திய அரசில் அமைச்சராக விளங்கிய பெருமை உடையவர். பிரிவுபடா காங்கிரஸ் கொறடாவாக நீண்டகாலம் பதவி வகித்தார்.

— —

சுருட்டுத்தொழிலாளர்

## அமைச்சரை சந்திக்க முடிவு

யாழ்ப்பாணம், சனி

சுருட்டுத் தொழில் சீரழிந்து நிலைக்குப் போய்க்கொண்டிருக்கிறது. பல ஆயிரம் குடும்பங்களுக்கு வாழ்வளித்த இந்த தொழில் பின்நோக்கிச் செல்லும் நிலை பற்றி அரசாங்கம் கண்மூடித்தனமாக இருக்கக் கூடாது.

கடந்த இருபது வருடங்களாக எமது சங்கம் ஆட்சியில் இருந்த அரசாங்கங்களுக்கு காலத்துக்குக் காலம் சுருட்டுத் தொழிலாளர்களின் இன்னல்களைக் கோரிக்கை மூலமும் மகஜர்கள் மூலமும் எடுத்துச் சொல்லியும் இதுவரை எதுவித பலனும் ஏற்படவில்லை.

இன்றைய ஐக்கிய முன்னணி ஆட்சியினர் தொழிலாளருக்கான சோஷலிசத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்லுபவர்கள். எமது முக்கிய கோரிக்கைகளுக்கு இவர்களும் செவிசாய்க்காவிட்டால் எதிர் காலத்தில் சுருட்டுத் தொழில் அழிந்தொழிந்துவிடும்.

இவ்வாறு அகில இலங்கை ஐக்கிய சுருட்டுத் தொழிலாளர் சங்கச் செயற்குழுக் கூட்டத்தில் தலைமை வகித்து உரைநிகழ்த்திய உபதலைவர் திரு. கே. பொன்னுத்துரை கூறினார். கூட்டத்தில் ஏ. என். இராசா, கே. ஐ. நாகராஜன், எஸ். அருமைநாயகம், எஸ். செல்வராசா, மற்றும் பலரும் பேசினர்.

கைத்தொழில் அமைச்சர் திரு. ரி. பி சுபசிங்காவை சங்கச் செயற்குழு உறுப்பினர்கள் பேட்டிகண்டு சுருட்டுத் தொழிலைக் கூட்டுஸ்தாபனம்ஆக்க, வற்புறுத்துவதோடு சேமலாபநிதிப் பிரச்சனை சம்பந்தமாக பேச்சுவார்த்தை நடத்துவதென்றும் முடிவுசெய்யப்பட்டது. (கு. வி. ம.)

—

## "குருநகரைப் பிரிக்கவும்"

யாழ்ப்பாணம், சனி

குருநகர் கலைக்கழகத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம், கழகச் செயலகத்தில் தலைவர் திரு. இ. டோறஸ் தலைமையில் நடைபெற்றது. நடப்பு வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்: தலைவர்: இ. டோறஸ் உப தலைவர்: அ. ஜோண், செயலாளர்: அ. யேசுதாசன் உப செயலாளர்: ஏ. யோகம் தனாதிகாரி: எஸ் பொன்சியானூஸ், உப தனாதிகாரி: அ. யஸ்ரின், நாடகப் பொறுப்பு இ. மாட்டீனஸ், சிரமதானப் பொறுப்பு: பீ மத்தியூஸ்.

யாழ். குருநகர் கிராமசபை யாளர்பிரிவில் சனத்தொகை அதிகமாக இருப்பதனால் இப்பிரிவை இரண்டாகக் கூறு போடவேண்டுமென்று கோரும் தீர்மானமும், யாழ் மாவட்டத்தில் மீன்பிடிப் பயிற்சிக்கல்லூரி அமைக்க

## இன்றைய பலன்

தை மாதம் 11-ந் திகதி (24-1-71)

மேஷம்- இன்று உடல் நலம் சிறிது பாதிக்கப்படலாம். வாய்வுப் பதார்த்தங்களைத் தவிர்த்துக்கொள்ளவும். எதிலும் நிதானம் வேண்டும்

ரிஷபம்- எதிர்பாராத வகையில் பொருள் விரயமாகும். வியாபாரத்துறையில் பிணக்குகள் தோன்றி மறையும். தெய்வ நம்பிக்கை நன்று

மிதுனம்- பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணைவர். குடும்பப் பிரச்சினைகளில் சுமுகமான நிலை தென்படும். இன்று பொன்னான்.

கடகம்- வேண்டிய ஒருவரை பகைத்துக்கொள்ள நேரிடலாம், அவசரப்போக்கினால் ஆபத்துக்கள் விளையும்

சிம்மம்- இன்று சுவை தரும் நிகழ்ச்சிகள் இடம் பெறும். வெளியிடத்திலிருந்து வியப்பூட்டும் செய்தி ஒன்று கிடைக்கலாம்.

கன்னி- வெற்றிப் பாதையில் வீறு நடை போடுவீர்கள். தொழில் துறையில் புதிய உற்சாகம் பிறக்கும் இன்று சுபதினம்

துலாம்- வணிகத்துறையில் முன்னேற்றம் காணப்படும். நீண்டநாள் கொடுக்கல் வாங்கல் நிவர்த்தியாகும். இன்று பொன்னான தினம்.

விருச்சிகம்- உறவுமுறைகளில் வெடிப்பு ஏற்படும்; பண விவகாரத்தின் மூலம் பகைதோன்றலாம் தொழில் துறையில் அதிக கவனம் செலுத்தவும்

தனுசு- பொருளீட்டுவதில் புதிய பாதையை வகுத்துக்கொள்ளுவீர்கள். கஷ்டங்கள் சில நிவர்த்தியாகும். திருப்தியான தினம்.

மகரம்- மாணவர்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சிகரமான தினம், கல்வித்துறையில் முன்னேற்றமுண்டு. வாகன நலனுக்கும் இடம் உண்டு

கும்பம்- தற்பெருமை மூலம் தடுமாற்றம் ஏற்படும். கண்துடைப்பு வேலை நடக்கும். கவனம் செலுத்தவும் பொறுமையைப் பேணி நடக்கவும்

மீனம்- கனிவான நினைவலைகளில் இன்று ஆனந்தமாக மிதந்து செல்லுவீர்கள். கல்வித்துறையில் வித்துவத்தன்மை தென்படும்

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## கணேசனை பாராட்டி தீர்மானம்

தாவடி, சனி

ஆன்மா லயப்பட்டால் இறைவனின் திருவடியை அடைந்துவிடலாம். அதே போலத் தாளவாத்தியத்திலே லயமும் பிரதானமாக அமைகின்றது. ஈழத்து லயஞானமணிகள் என்று கருதப்படுபவர்களுள் நாச்சிமார்கோவில் தவில் வித்துவான் திரு கே. கணேசனும் முன்னணி வகிப்பதை தமிழக, ஈழத்துக் கலாரசிகர்கள் நன்கு அறிவார்கள் அவரை நாம் பாராட்டுதல் வேண்டும்" என திருநெல்வேலி நந்தி இசை மன்றச் செயலாளர் திரு. எம். என். செல்லத்துரை, மன்றத்தில் நடைபெற்ற ஆலோசனைக்

வேண்டுமெனக் கோரும் தீர்மானமும் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

## தொண்டமானாற்றில் மீனவர் மரணம்

வல்வெட்டித்துறை, சனி

தொண்டமானாற்றைச் சேர்ந்த ஆண்டி குணசாமி வயது 45 தொண்டமானாற்று ஆற்றில் கட்டுமரம் ஒன்றில் மீன்பிடிக்கச் சென்ற இடத்தில் தவறி ஆற்றில் விழுந்து இறந்து விட்டார்.

கிராம சேவகர் திரு. வி. ஜெயவீரசிங்கம் சாட்சியை ஆஜர் செய்தபின் மரண விசாரணை அதிகாரி திரு. சி. தாமோதரம்பிள்ளை தற்செயலாக ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளித்தார்.

— —

## மீன் கொள்வனவு

அம்பன், சனி

தாளையடியிலுள்ள மீன்பிடிக் கூட்டுஸ்தாபனம் அடுத்த மாதம் தொடக்கம் மீன்பிடிக் கொள்வனவை ஆரம்பிக்கவிருக்கின்றது. இதனால் மீனவர்கள் மீன்களைச் சிரமமின்றியும் நியாயமான விலைக்கும் விற்கக்கூடியதாக இருக்கும். இந்த ஸ்தாபனம் ஜீப் வண்டி மூலமாக ஊர் ஊராகச் சென்று மீனைக் கொள்வனவு செய்கிறது.

—

## வடமராட்சியில் சுதந்திரதின விழா

அம்பன், சனி

வடமராட்சிப் பகுதியில் வல்வெட்டித்துறை நெற்குழு மைதானத்தில் வடமராட்சி வடக்குக் கிழக்குக் காரியாதிகாரி திரு. மு. தம்பிமுத்து தலைமையில் அடுத்த மாதம் 4-ந் திகதி சுதந்திரதினவிழா கொண்டாடப்படவிருக்கின்றது. இவ்விழாவில் சிறுவர் ஓட்டம், கயிறு இழுத்தல், அஞ்சல்ஓட்டம், நீந்தல்போட்டி, சைக்கிள் ஓட்டம், வயோதிபர் நடைப்போட்டி ஆகியன இடம்பெறவுள்ளன.

—

## புதிய மண்டபம்

தாவடி, சனி

கொக்குவில் ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி ஆலயத்தில் புதிதாக எழுந்தருளியுள்ள முருகமூர்த்திக்கு புதியமண்டபம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது, சைவ இளைஞர்மன்ற வாலிபர்கள் முன்னின்று நிதி திரட்டி இம் மண்டபம் துரிதமாக முடிவதற்கு உதவி புரிகிறார்கள். தைப்பூசத் தினத்தன்று பிரதிஷ்டா விழா நடைபெறுமென நம்பப்படுகிறது.

—

## யாழ் இளைஞர் கழகம் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ் இந்து மகளிர் கல்லூரியின் அயலிலுள்ள மாணவிகள் இவ்வாண்டு அங்கு அனுமதி மறுக்கப்பட்டது சம்பந்தமாகக் கல்வி அமைச்சருடனும் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடனும் தொடர்பு கொள்வதென திரு க. பரமானந்தம் தலைமையில் கூடிய யாழ் இளைஞர் கழகம் தீர்மானித்தது.

கூட்டத்தில் பேசுகையில் கூறினார். தமிழகம் சென்று தவில் வாசித்து, ஈழத்திற்குப் பெரும் புகழீட்டிய தவில் வித்துவான் திரு. கே. கணேசனுக்கு பாராட்டு விழா நடத்துவதாக இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.


## இப்பொழுது விற்பனையாகிறது

ஈழநாடு

10-வது ஆண்டு நிறைவை யொட்டி நடாத்திய சிறுகதை, ஓரங்க நாடகப் போட்டிகளில் பரிசு பெற்றவை நூலுருவில் வெளிவந்துள்ளன.

### கங்குமட்டை

(சிறுகதைத் தொகுதி)

செங்கை ஆழியன் எழுதிய கங்குமட்டை
செம்பியன் செல்வன் எழுதிய பூவும் கனியும்
அப்பச்சி மகாலிங்கம் எழுதிய ஆறுதற்பரிசு
எம். ஏ. ரஹ்மான் எழுதிய சிறுகை நீட்டி
மு. கனகராசன் எழுதிய கண்டுவிரல் மெட்டி

தொகுதி: 1 விலை ரூபா ஒன்று

### விடிய இன்னும் நேரமிருக்கு

(ஓரங்க நாடகங்கள்)

செம்பியன் செல்வன் எழுதிய விடிய இன்னும் நேரமிருக்கு
"யாழினி" எழுதிய தாஜ்மகால்
உடுவை தில்லைநடராசா எழுதிய பூமலர்
மு. கனகராசன் எழுதிய சிலுவையும் குத்துவாளும்

தொகுதி: 1 விலை ரூபா ஒன்று

கிடைக்குமிடம்: ச. கிருஷ்ணசாமி, பெரியகடை யாழ்ப்பாணம்

'ஈழநாடு'
த. பெ. எண்: 49 — யாழ்ப்பாணம்

# 'இலங்கை-இந்திய இருதரப்புவர்த்தகம் அவசியம்'

-- இந்திய தூதுவர்

கோட்டை, சனி

இலங்கை-இந்திய பொருளாதாரத்தைப் பேணுவதில் இரு நாடுகளும் பரஸ்பரம் உதவி செய்யவேண்டும். இலங்கை சிறிய நாடாகயிருப்பதனுல் பெரியளவில் கைத்தொழில்களை நிறுவவேண்டும்.

இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை இந்தியா இறக்குமதி செய்யவேண்டும். அதேபோல இந்திய உற்பத்திகளை இலங்கை இறக்குமதி செய்வதன் மூலம் இந்தியாவுக்கு உதவி அளிக்க முடியும். இந்திய-இலங்கை நட்புறவை வளர்ப்பதற்கு இவ்விரு நாடுகளின் இரு தரப்பான வர்த்தகம் திறவுகோலாக இருக்க முடியும்.

இவ்வாறு கொழும்புஹெரூட்டறி கிளப்பில் நடைபெற்ற இந்திய-இலங்கை உறவு சம்பந்தமான கருத்தரங்கில் பேசிய இலங்கைத் தூதுவர் திரு. வை. கே. பூரி கூறினர்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

எம்மை உடனடியாகத் தாக்கும் பிரச்னைகள் பற்றி ஆலோசிப்பது மட்டுமின்றி எதிர்காலத்தில் இருநாடுகளினதும் பொதுப் பிரச்னைகள் பற்றியும் ஆராய்தல் அவசியமாகும். இப்பொதுப் பிரச்னையில் இரு நாடுகளையும் எதிர்நோக்கியுள்ள பொருளாதாரப் பிரச்னைக்குத் தீர்வு காண முயல்வதாகும்.

இரு நாடுகளும் தங்களது பொருளாதாரத்தை ஸ்திரமாக அமைப்பதற்கு ஒன்றுக்கொன்று உதவி புரியலாம்.

---

## பாடகி வசந்தகுமாரி பரிசு பெறுகிருா

சென்னை, ஜன. 23

1970-ம் ஆண்டுக்கான சாகித்திய அகதமியின் பரிசு பிரபல பாடகி எம். எல். வசந்தகுமாரிக்கு கிடைத்துள்ளது. கர்னுடக இசக்காக இந்தப் பரிசு திருமதி வசந்தகுமாரிக்கு அளிக்கப்படுகின்றது.

பரதநாட்டியத்துக்கான பரிசு திருமதி சாந்தராவுக்கு அளிக்கப்பட்டுள்ளது. வீணை வித்துவான் வி. துரைசாமிஐயருக்கும் பரிசு வழங்கப்பட்டுள்ளது.

---

## புதிய அரசியல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஊ, இந்நாட்டுப் பெரும்பான்மையினரான சிங்கள மக்களின்மதமான பௌத்த மதமே நாட்டின் பிரதான மதம் என்று திருத்தப்படவேண்டும் என்று அவர்கள் கருதுவதாகத் தெரிகிறது. பல முக்கிய பௌத்த பிரமுகர்களும் இதுசம்பந்தமான திருத்தங்களைச் சமர்ப்பிப்பதில் தீவிரமாகியுள்ளனர்.

தமிழ் மகாநாடுத் தொடர் குழு திரு. நேசையா தலைமையில் புதிய அரசியல் திட்டம் மீதான அடிப்படைத் தீர்மானங்கள பற்றி ஆராய இம்மாதம் 26-ந் திகதி சென். ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்தில் கூடவிருக்கிறது.

இதில் தமிழ் மகாநாட்டின் காரியக் கமிட்டியும். டிசம்பர் 15-ந் திகதி பல்கலைக்கழக அனுமதி குறித்து யாழ். நகரமண்டபத்தில் நடைபெற்ற மகாநாட்டில் கலந்துகொண்ட கல்வி மான்களும் கலந்துகொள்வர்.

## பிரிட்டிஷ் நிபுணர்

கோட்டை, சனி

பிரிட்டனைச் சேர்ந்த நீர் சுத்திகரிப்பு நிபுணர், திரு. எஸ். ஜே. வின்ட்ஸே நாளை கொழும்பு வருகிருர். இவர் 'பட்டர்சன் கண்டி இன்டர்னஸனல்' கம்பனியின் அதிபராவர். இவர் இங்கு 29-ம் திகதிவரை தங்கியிருந்து நீர் சுத்திகரிப்பு பொறிகளை பார்வையிடுவதுடன்மேலும் இத்தகைய பொறிகளை நிர்மாணிக்கும் சாத்தியக்கூறுகளை ஆராய்வார்.

# கஞ்சாச்செடி உற்பத்தியில் 'கள்ளத்தோணி'களாம்

## பயிரை அழிக்க பொலிஸ்-ராணுவம் கூட்டு நடவடிக்கை

கொழும்பு, சனி

சட்டவிரோதக் குடியேற்றக்காரர்கள் கஞ்சாப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பது கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறதாம்.

தெற்கிலும் வடமத்திய மாகாணப் பகுதியிலும் பெருமளவில் கஞ்சாச் செடி உற்பத்தி செய்யப்பட்டிருப்பதாகவும் இதற்கு சட்டவிரோதக் குடியேற்றக்காரர்கள் உபயோகிக்கப்பட்டிருப்பதாகவும் சட்டவிரோதக் குடியேற்றத் தடுப்பு நடவடிக்கையிலீடுபட்டுள்ள இராணுவத்தினர் இதைக் கண்டு பிடித்துள்ளதாகவும் அறியப்படுகிறது.

இக்கஞ்சாச் செடிகளை அழிப்பதற்கு பொலிசாரும் இராணுவமும் விரைவில் கூட்டு நடவடிக்கை மேற்கொள்ளவிருக்கின்றன.

## பிரயாணிகள் பஸ்ஸைத் தள்ளும் நிலை

மன்னூர், சனி

பஸ் வண்டிகளில் ஏறும் பிரயாணிகளே பஸ் வண்டியைக் குறிப்பிட்ட இடத்துக்குச் சேர்க்கவேண்டியிருக்கிறதாம்.

மன்னூர்ப் பகுதியில் இப்படிப்பட்ட பல சம்பவம் நேர்ந்துள்ளதாகத் தெரியவருகிறது.

அவசரமாகப் பிரயாணத்துக்காக பஸ் வண்டிகளில் செல்லும் பிரயாணிகள் வழியில் முடமாகி நின்றுவிடுகின்ற பஸ் வண்டிகளை தள்ளியே செல்லவேண்டியிருக்கிறதென்றும் தெரியவருகிறது.

## விவசாயிக்கு வி. உத்தியோகத்தர் ஆலோசனை

உடுப்பிட்டி, சனி

விவசாயிகள் விவசாய உத்தியோகத்தரின் ஆலோசனைகளைத் தகுந்த சமயத்தில் பெறத் தவறுவதாலேயே விவசாயப் பயிர்கள் தொற்றுநோய்க்குள்ளாகி உற்பத்தியும் குறைகின்றது. நெல்வகையில் புதிய இனங்களை நாம் அறிமுகப்படுத்துவதன்நோக்கம் வருவாயையும் உத்பத்தியையும் பெருக்குவதற்கேயாகும்.

இவ்வாறு தலைமைப்பீட விவசாயப் போதனுசிரியர் திரு கே. குமாரசாமி நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற வடமராட்சி இளம் விவசாயிகள் கழகக் கருத்தரங்கு பயிற்சிவகுப்புக்குத் தலைமைவகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

வடமராட்சியைச் சேர்ந்த இருபது இளம் விவசாயிகள் கழகங்களிலிருந்தும் சுமார் 40 பிரதிநிதிகள் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

## இலங்கை விஞ்ஞானி பொன்னம்பெருமா

# அப்பலோ-14 கொண்டுவரும் சந்திரமண்ணையும் ஆராய்வார்

கோட்டை, சனி

பிரபலஇலங்கை விஞ்ஞானியான டாக்டர். பொன்னம்பெருமா இன்று மீண்டும் வெளிநாட்டுக்குப் புறப்பட்டார்.

டாக்டர் பெருமா அமெரிக்க விண்வெளி வீரர்களால் கொண்டுவரப்பட்ட சந்திரமண் மாதிரிகளை ஆராய்வதில் முன் ஈடுபட்டதுபோலவே அப்பலோ-14 வீரர்களால் கொண்டுவரப்படவிருக்கும் சந்திர மண் மாதிரிகளை ஆராய்வதிலும் முக்கியபங்கு வகிப்பார்.

டாக்டர் பொன்னம்பெருமா இலங்கையில் கடந்த ஒருமாதமாக பல இடங்களிலும் விஞ்ஞான சொற்பொழிவுகள் நிகழ்த்தினர் அமெரிக்கா செல்லுமுன் சிங்கப்பூர், ஜப்பான் போன்றநாடுகளிலும் அவர் விஞ்ஞான சொற்பொழிவுகள்நிகழ்த்துவார்.

# குற்றவாளிச்சிறுவரை பிரம்பால் கட்டுப்படுத்தலாம்

## நீதியரசர் ஒருவர் கருத்து

ஹொங்கொங், ஜன. 23

குற்றச் செயல்களில் ஈடுபடும் இளைஞர்களைக் கட்டுப்படுத்துவதற்கு பிரம்படி கொடுக்க வேண்டுமென ஹொங்கொங் நீதியரசர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு கொலைக் குற்றத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்ட எழுபதுபேர்களுள் அரைவாசிப் பேர்கள்21வயதுக்குட்பட்ட சிறுவர்களாகவிருந்துள்ளனர். களவு, கொள்ளை முதலிய குற்றங்களுக்காக கைது செய்யப்பட்ட 2327 பேரில் 75 சத விகிதத்தினர் 21வயதுக்குட்பட்டவர்களாகவும் இருந்து வந்துள்ளனரென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதியரசர் ஐவோரிக்பி மேலும் தெரிவிக்கும்போது சின்னஞ்சிறு வயதிலிருந்தே பிள்ளைகளைப் பிரம்பாலடித்துப் பயமுறுத்தித் திருத்திஞல் நாட்டில்குற்றச் செயல்கள் குறையுமென்றும்குறிப்பிட்டுள்ளார்.

## இந்திரா ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இகாங்கிரஸ் கட்சிக்கு 12 டங்களை ஒதுக்குவதற்கு தி.மு.க. முன்னர் ஒப்புக்கொண்டதாகக் கூறப்படுவதை திமு கருணநிதி மீண்டும் மறுத்திருக்கிருர்.

பாரதக் கம்யூனிஸ்ட் கட்சி பிரஜா சோஷலிஸ்ட் கட்சிகளின் செயற் குழுக்களும் இன்று கூடி தங்கள் கட்சிகளுக்கு ஒதுக்கப் பட்டுள்ள தொகுதிகள் பற்றி ஆலோசித்தனர்.

## சென். ஜோன்ஸ் படையினருக்கு கவர்ணர் பாராட்டு

யாழ்ப்பாணம், ஞாயிறு

முகாந்திரம் இ. பொ. இராசையா, திரு அந்தோனியா சுவாமிநாதர், சகோதெரிசியா ஆர் கே. தம்பையா ஆகியோர் சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் யாழ்ப்பாணக் கிளையை புனரமைப்புச் செய்து திறம்பட நடாத்தி வருவதுபற்றி நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். அவர்களின் அயரா முயற்சியால் உருவான ஆண்டுமலர் என் மனதை பெரிதும் கவர்ந்துள்ளது. அவர்களுடைய இயக்கம் மேன்மேலும் வளர்ச்சியடைந்து நாட்டுக்குச் சேவை செய்ய வேண்டுமென வாழ்த்துகிறேன்.

இவ்வாறு அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு வருகை புரிந்த மகாதேசாதிபதி திருவல்லியம் கோபல்லவா தம்மைச் சந்தித்த சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் யாழ்ப்பாணக் கிளையினரைப் பாராட்டி அவர்களது பதிவேட்டில் எழுதுகையில் குறிப்பிட்டுள்ளார்.

## புலோலி கி. ச. புதிய தலைவர்

புலோலி, வெள்ளி

புலோலி கிராமசபை தலைவர் தேர்தல் இன்று கிராமசபை மண்டபத்தில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். நல்லநாதன் தலைமையில் நடைபெற்றபோது முன்னைய தலைவரான திரு. தம்புசிதம்பரப்பிள்ளை ஏகமனதாக மீண்டும் தெரிவு செய்யப்பட்டார்.

12 வட்டாரங்களைக் கொண்ட கிராமசபையின் உபதலைவராக திரு. வே. கதிர்காமு தெரிவுசெய்யப்பட்டார் இவரது தெரிவும் ஏகமனதாக நடைபெற்றது.

# "திருத்தங்கள் அரசாங்கத்தின் அடிப்படைக் கொள்கைக்கு மாருக இருக்கக்கூடாது"

- டாக்டர் கொல்வின்

கொழும்பு, வெள்ளி

புதிய அரசியல் திட்டத்துக்கென சமர்ப்பிக்கப்பட்ட அடிப்படைத்தீர்மானங்களுக்கான திருத்தங்கள் அரசாங்கத்தின் அடிப்படைக் கொள்கைகளுக்கு மாறுபடாததாக இருக்க வேண்டுமென்று அரசியல் அமைப்பு விவகார அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா இன்று தெரிவித்தார்.

அரசியல் நிர்ணயசபைக் கூட்டத்திலேயே அவர் இதனைக் கூறினர்.

சமர்ப்பிக்கப்பட்ட அடிப்படைத் தீர்மானங்களுக்கு திருத்தங்கள் வரவேற்கப்படுகின்றன வென்றும், சமஷ்டிபோன்ற அடிப்படை கொள்கைளுக்கு மாறுபட்ட திருத்தங்களாக அவை இருக்கக்கூடாதென்று டாக்டர் கொல்வின் தெரிவித்தார். திருத்தங்கள் பெப்ரவரி 11க்கு முன்னர் அனுப்பவேண்டும் என்றும் தெரிவித்தார்

இன்று அரசியல் நிர்ணய சபையின் கூட்டம் 50நிமிட நேரம் நடைபெற்றது.

டாக்டர் கொல்வின் பேசுகையில் கூறியதாவது:-

புதிய அரசியல் திட்டம் பற்றிய அடைப்படைத் தீர்மானங்களை அரசாங்கம்வழிகாட்டுக் குழுவின் சம்மதத்தின்பேரிலேயே சமர்ப்பித்தது. இவ்அடிய்படைத் தீர்மானங்கள் இறுதியானது அல்ல. இவற்றிற்கு திருத்தங்கள் கொண்டுவரலாம்.

அடிப்படைத் தீர்மானங்கள் உள்ளூராட்சிமன்றம், மற்றும் பொதுமக்கள் நிலையங்கள் போன்றவற்றிற்கு அனுப்பிவைக்கப்படும். இவ்வடிப்படைத் தீர்மானங்களுக்கு திருத்தங்கள் வரவேற்கப்படுகின்றன. ஆனல் திருத்தங்கள் அரசாங்கத்தின் அடிப்படைக் கொள்கைக்கு மாறுபடாததாக இருக்கவேண்டும். அரசாங்கத்தின் அடிப்பை கொள்கைக்கு மாறுபட்ட திருத்தங்களை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளமாட்டாது.

கொண்டுவரப்படும் திருத்தங்களுக்கு அரசாங்கம் காட்டும் பிரதிபலிப்பைப் பொறுத்தே தமிழரசுக்கட்சி எதிர்காலத்தில் அரசியல் நிர்ணய சபைக் கூட்டங்களில் கலந்து கொள்வது தங்கியுள்ளது என உடுவில் பிரதிநிதி வி. தர்மலிங்கம் கூறினர்.

எதிர்க் கட்சித் தலைவர் ஜே. ஆர். ஜெயவர்த்தன பேசும் போது அரசியல்நிர்ணய சபைக் கூட்டங்களுக்கு செலவு செய்யும்போது அது பெறுமதியாக இருக்கவேண்டும் எதிர்காலக் கூட்டங்கள் நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் நடைபெற வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

---

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு ஜனவரி மாதம் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது